நூலகம்

8 DEC 1969

லெனின் நூல் நிலையம்
மாஸ்கோ



புத்தகப் பணி ஏடு

டிசம்பர் 1969. மலர் 4. இதழ் 4.



தரமான. உறுதியுள்ள. உழைக்கக் கூடிய

மாட்டுத் தொழுவங்கள்

கட்ட

சங்கர் சிமெண்ட்

SANKAR CEMENT

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், சென்னை-2 தொழிற்சாலைகள்: சங்கா நகர். சங்கரி.

Criterion ICT 2223 TM

நூலகம்

ஆசிரியர் :

குயிலன்

மலர் 4 இதழ் 4

டிசம்பர் 1969

ஆண்டுச் சந்தா ரூபாய் ஒன்பது

கார்ட்டூன்

புதிய இயக்குநர்

தலையங்கம்

தேசீய நூலக வாரச் சிந்தனைகள்

டாக்டர். எஸ். ஆர். ரங்கநாதன்

சிவராம காரந்த்

மணவை முஸ்தபா

இந்திய நூலகத் தந்தை

இரா. முத்துக்குமாரசாமி

லெனின் நூல் நிலையம்

தத்யானு போஸ்த்ர மோவா

ஊதிய உயர்வு

குளச்சல் தங்கவேல்

இன்னும் பல

அலுவலகம்:
14, தணிகாசலம் செட்டி ரோடு,
தியாகராயநகர்,
சென்னை-17

தொலைபேசி எண் :
441970

NOOLAGAM
Library & Book Trade Monthly

Published by :
BIBLIOPOLE

14, Thanikachalam Chetty Road,
Madras-17
Annual Subscription Rs. 9.

நூலகர் : இப்போதெல்லாம் 30 நாட்களுக்குள் புத்தகங்களைத் திருப்பித் தரும்படி வாசகர்களைக் கேட்கிறோம்.

புத்தக வியாபாரி: எங்கள் புத்தகங்களை அவ்வாறு கேட்பதில்லை. அதற்குரிய விலையைத்தான் கேட்கிறோம்.

புதிய இயக்குநர்

பொது நூலகத் துறை இயக்குநராகப் பொறுப்பேற்றிருக்கும் திரு. சிட்டிபாபு அவர்களை வரவேற்று, வாழ்த்துகிறோம். பொது நூலகத் துறைக்கு அந்த இயக்கத்தை நன்குபுரிந்து கொண்டுள்ள ஒருவரே இயக்குநராக இருக்க வேண்டுமென்ற நம் கோரிகைக்கு இது ஒரு ஆரம்ப வெற்றியாகும்.

திரு. சிட்டிபாபு அவர்கள் அமெரிக்க நாட்டிற்குச் சென்று, அங்கு நடைபெறும் நூலகப்பணியின் தரத்தை, சிறப்பாக 'ரெபரன்ஸ் சர்வீசை' நுணுக்கமாகக் கண்டறிந்து வந்துள்ளார். நூலகம், நூலகர், நூலகப் பணி ஆகியவை தரத்திலும், அந்தஸ்திலும் அமெரிக்க நாட்டில் சிறப்புற்று, உயர்ந்து விளங்குவதையும் கண்டறிந்து வந்துள்ளார். தமிழகத்திலும் அவ்வாறு அமைய வேண்டுமென்று அவர் ஆவலுடன் விரும்புவதை, "நூலகப்பணித் தொடர் சொற்பொழிவு" ஆரம்ப விழாவில் தலைமைவகித்துப் பேசும் போது அவர் குறிப்பிட்டது நூலகத் துறைக்கு நம்பிக்கை யூட்டுவதாக இருக்கிறது.

அவருடைய கனவு நனவாக, அவர் மேற் கொள்ளும் ஒவ்வொரு புதிய முயற்சிக்கும் "நூலகம்" உறு துணையாக நிற்கும் என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

கர்சன் அண்டு கோ சேஷாசலம்

டாக்டர் எஸ். ஆர். ரங்கநாதன்

சேஷாசலம் அமரராகிவிட்டார்.

அவர் ஆனர்ஸ் பட்டதாரி. சட்டம் படித்தவர். குடும்பத் தொழிலாகிய மரவியாபாரத்தை மேற்கொண்டார். வியாபார சம்பந்தமாக உலகம் முழுவதும் சுற்றிய அனுபவசாலி, திறமை சாலி. தனது தொழிலில் பல புதிய உத்திகளை கையாண்டார். இயந்திரங்களைப் பயன் படுத்தினார். வீட்டு மரச்சாமான்களை ரம்மியமாகச் செய்வதில் வல்லவர். 1927-ல் அவருடன் எனக்கு தொடர்பு ஏற்பட்டது. நூலக மர பர்னிச்சர்களை உருவாக்குவதில் கற்பனையுடன் பெரிதும் உதவியுள்ளார். இவர் உருவாக்கிய பருவ ஏடுகள் காட்சி மேஜையை மற்ற நாடுகளும் பயன் படுத்தின. சென்னைப் பல்கலைக்கழக நூலக பர்னிச்சர்கள் இவர் செய்தவையே.

இந்திய தர நிர்ணய அமைப்பு (ISI) மர கமிட்டிகள் பலவற்றில் மிக்க ஈடுபாட்டுடன் பணியாற்றியுள்ளார். இந்திய நூலகங்கள் ISI பர்னிச்சர் தரத்தைப் பின்பற்ற வேண்டுமென்று விரும்பியவர்.

அவர் இலக்கியம், நுண்கலைகள், சமஸ்கிருதம், மதம், தத்துவம், இசை, நாடகம் ஆகியவற்றில் ஈடுபாடும் புலமையும் மிக்கவர். நன்கொடைகள் வழங்குவதில் தாராள மனம் படைத்தவர். பல அறக்கொடை நிறுவனங்களின் தருமகர்த்தாவாகப் பணியாற்றியுள்ளார். ஸ்ரீபெரும்புதூர் சமஸ்கிருதக்கல்லூரி, ஸ்ரீ பார்த்தசாரதிசாமி கோவில் திருப்பணிகளில் ஈடுபாடு மிக்கவர்.

சென்னை புத்தகாலய பிரசார சங்கப் பொருளாளராகப் பணியாற்றியுள்ளார். சாரதா ரங்கநாதன் நூலக வியல் அறக்கொடை தருமகர்த்தாக்கள் குழுவின் அங்கத்தினருமாவார்.

கடந்தவாரம் ஊட்டிக்குச் சென்று திரும்பும் வழியில் பெங்களூரில் என்னைச் சந்திப்பதாக எழுதியிருந்தார். 'MALA' பற்றியும் மற்றவை பற்றியும் பேசப் போவதாக எழுதியிருந்தார்.

அந்தோ! ஊட்டியிலிருந்து திரும்பாமலேயே அமரராகி விட்டார்.

அவர் பிரிவால் துயருரும் மனைவிக்கும் சுற்றத்தாருக்கும் 'மாலா சார்பாகவும், என் சார்பாகவும், என் துணைவி சார்பாகவும், ஆழ்ந்த வருத்தத்தையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அமரர் சேஷாசலம் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கிறேன்.

தேசிய நூலக வாரச் சிந்தனைகள்

டாக்டர் எஸ். ஆர். ரங்கநாதன்

தமிழில் : பார்த்தசாரதி பெருமாள் B. A., B. Lib. Sc.,

அரசுகள் சாதித்தவை

1930-ல் அனைத்து ஆசிய கல்வி மாநாடு வாரணுசியில் மிகச் சிறப்பாக நடந்தது. இம்மாநாட்டின் நூலகச் சேவைப்பிரிவின் கருத்தரங்கில் என்னுடைய டிராப்ட் மாடல் நூலகச்சட்டத்தை விவாதித்து, பொதுவாக ஏற்றுக் கொண்டது.

திரு. குமார் முனிதரா ராய் மகா செய், தன் மாநில தேவைக் கேற்ப சிற்சில மாற்றங்களைச் செய்து, என்னுடைய டிராப்ட் மாடல் நூலகச் சட்டத்தை வங்காள சட்டசபையில் மசோதாவாக தாக்கல் செய்தார். அதை கவர்னர் ஜெனரல் ஏற்க மறுத்து நிராகரித்து விட்டார்.

1934ல், கூட்டு மாநிலமாக இருந்த போது சென்னை சட்டசபையில் நூலகச்சட்ட மசோதா தாக்கலாயிற்று. தமிழகத் தேவைகளைக் கருத்தில் கொண்டு இதன் விபரங்கள் தயாரிக்கப் பட்டிருந்தன. அந்நாளைய அரசு இம் மசோதாவை கடுமையாக எதிர்த்தது. மசோதா நிறைவேறவில்லை.

காந்தி யுகத்தில் பிரிக்கப்படாத பம்பாய், மத்திய பிரதேசம் திருவாங்கூர் ஆகிய மாநில அரசுகளுக்கு, டிராப்ட் நூலகச் சட்ட மசோதாக்களும், நூலக அபிவிருத்தித் திட்டங்களும் சமர்ப்பிக்கப்பட்டன.

இவற்றைப் பெற்றுக்கொண்ட மாநில அரசுகளில், பம்பாய் மௌனம் சாதித்தது. மத்தியபிரதேசம், தனது மாநிலத்தில் மிகச் சொற்பமான எண்ணிக்கையிலேயே நூலகங்கள் உள்ளன என்றும், அதனுலேயே நூலகச் சட்டம் அனுவசியமானது என்று கருதப்படுவதாகவும் கூறி பதில் எழுதி விட்டது.

திருவாங்கூர் மாநிலமோ. தனது மாநிலத்தில் ஏற்கனவே மிக அதிக எண்ணிக்கையில் நூலகங்கள் இருப்பதால், நூலகச் சட்டம் அவசியமாகத் தோன்ற

வில்லை என்று பதில் எழுதி விட்டது.

நூலகச்சட்டத்தின் அடிப்படைக் கருத்துக்களையும், அவசியத்தையும் மாநில அரசுகள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதையே மேற்சொன்ன பதில்கள் தெளிவாக்குகின்றன. "Heads I win, tails you lose" என்ற ஆங்கிலப் பழமொழி இச் சந்தர்ப்பத்தில் எவ்வளவு பொருத்தமாக அமைந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்தேன்.

1947ல் இந்தியா சுதந்திரமடைந்தது. 1946ல் கூட்டு சென்னை மாநிலக் கல்வி அமைச்சராகஇருந்த திரு. அவிஞசிலிங்கம் செட்டியார், தமிழகத்திற்குஏற்ற டிராப்ட் நூலகச்சட்ட மசோதாவையும், இருபது ஆண்டு நூலக அபிவிருத்தித் திட்டத்தையும் என்னிடமிருந்து பெற்றுக்கொண்டார். தமிழ்நாடு 1948ல் நூலகச் சட்டமியற்றியது. இந்தியாவிலேயே நூலகச் சட்டமியற்றிய முதல் மாநில அரசு என்ற நற்பெயரை சம்பாதித்துக் கொண்டது.

1955ல் ஹைதராபாத் கல்வி அமைச்சர் திரு. கோபால் ராவ் எக் போட்டே ஹைதராபாத் பொது நூலகங்களின் நூலகச்சட்டத்தை சட்டப் புத்தகத்தில் சேர்த்துப்பெருமை பெற்றார்.

1961ல் மைசூர் மாநிலம் டிராப்ட் நூலக மசோதாவை உருவாக்க, நூலகக் கமிட்டியை நியமித்து, அதன் தலைவராகப்பணியாற்ற என்னை கேட்டுக் கொண்டது. அந்நாள் கல்வி அமைச்சர் திரு காந்தி, நூலகச்சட்டம் வருவதில் அதிக ஈடுபாடு காட்டினர். 1965ல் மைசூர் மாநிலம் நூலகச் சட்டமியற்றியது.

1968ல் மகாராஷ்டிர அரசு, நூலகச் சட்டத்தை ஏற்றுக் கொண்டு, சட்டமாக்கியது. இது ஆற்றல் வாய்ந்த சட்டமாக அமையாதது குறையே.

1958லேயே கேரள அரசு டிராப்ட் நூலகச் சட்ட மசோதாவையும், முப்பது ஆண்டு நூலக அபிவிருத்தித் திட்டத்தையும் என்னிடமிருந்து கேட்டு வாங்கியது. கேரளத்தில் நிலையான ஆட்சி நிலவாததால், இன்றும் சட்டமாகாமல் உள்ளது.

ஆயினும் என்னுடைய அந்த அறிக்கையின் இரண்டாம் பதிப்பு வெளியிடப் பட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

1968ல், இன்றுள்ளமாறுபட்ட சூழ்நிலைகளுக்கேற்ப, பல புதிய மாறுதல்கள், திருத்தங்கள் செய்யப்பட்ட டிராப்ட் நூலக மசோதாவை கேரள அரசு என்னிடமிருந்து பெற்றுக்கொண்டது. கேரளஅரசு நூலகச்சட்டமியற்ற தீவிரமாக உள்ளதையே இது புலப்படுத்துகிறது.

நூலகச் சட்டமியற்ற, நூலக மசோதாக்களை அஸ்ஸாம், குஜராத், மத்தியப்பிரதேசம், உத்திர பிரதேசம், மேற்கு வங்காளம் ஆகிய மாநில அரசுகளுக்கு அனுப்பி வைத்துள்ளேன். ஜம்மு, காஷ்மீர் மாநிலத்திற்கு ஏற்ற நூலக மசோதாவை அதன் அரசிடம் திரு. பி. என். கௌலா சமர்ப்பித்துள்ளார்.

இன்றுவரை நூலகச் சட்டங்களை இயற்ருத மாநில அரசுகள், தங்கள் சட்டப்புத்தகங்களில் இச் சட்டங்கள் உடனடியாகபதிவாக ஏற்பாடுகள் செய்யவேண்டுமென விரும்பி வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசு செய்தது யாது?

1948ல், மத்திய கல்வி அமைச்சகம் நூலகக் கமிட்டியை நியமித்தது. இந்தக் கமிட்டியில் உறுப்பினராகப்பணியாற்றினேன். அப்போதுஎன்னுல் உருவாக்கப்பட்ட தேசிய நூலக மசோதா, நாடு முழுவதும் ஒரே சீரான நூலகப் பணி ஏற்படத்தக்க நல்லதிட்டம் என நூலகக் கமிட்டி பொதுவாக ஏற்றுக் கொண்டது. இந்திய நூலகச் சங்கம், பார்லிமென்ட் உறுப்பினர்களுக்கு தேசிய நூலக மசோதாவின் நகல்களைக் கொடுத்து, சட்டமாக்க ஆவன செய்யுமாறு வேண்டிக்கொண்டது.

இப்போதுள்ள மத்திய கல்வி அமைச்சர் டாக்டர் வி. கே. ஆர். வி. ராவை தேசிய நூலகச்சட்டம் உடனடியாக நிறைவேற்றிவைக்க வேண்டுமென விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். 1963ல் என்னுடைய Five laws of Library Science நூலின் இரண்டாம் பதிப்பில், தேசியநூலக மசோதா மிக திருந்திய வடிவில் வெளியிட்டுள்ளேன். இந்திய நூலகச் சட்டமியற்றும் பொழுது இத்திருந்திய மசோதாவைக் கவனத்தில் கொள்ளகல்வி அமைச்சாடாக்டர் வி. கே. ஆர். வி. ராவை கேட்டுக் கொள்கிறேன்.

மாநில நூலகச் சங்கங்கள்

(MALA) சென்னைப்புத்தகாலய பிரச்சார சங்கம், இருபது ஆண்டுகளாக இடைவிடாது பிரசாரம் செய்து, மக்களிடையே நூலக உணர்வை வளர்த்தனர். இத்தகைய நல்ல தொண்டினுல்தான் இந்தியா விடுதலை அடைந்த அடுத்த ஆண்டிலேயே, 1948ல் நூலகச்சட்டத்தைஇயற்றி, தமிழ் நாடு அரசு, இந்தியாவில் நூலக சட்டத்தை இயற்றிய முதல் மாநிலம் என்ற அழியாப்புகழைப் பெற்றது.

ஹைதராபாத் நூலகச் சங்கம் பொது மக்களிடையே நூலக உணர்வைத் தட்டி எழுப்பி, வளர்த்தது. அதன் பலனுகவே, ஹைதராபாத் நூலகச் சட்டம் நிறைவேறியது.

மற்ற மாநில நூலகச் சங்கங்களும் இந்திய தேசிய நூலகச் சங்கமும் ஒருங்கிணைந்து இடைவிடாதுகடுமையாகத்தொடர்ந்து பாடுபட்டு, மாநில அரசுகளும் மத்திய அரசும் நூலகச் சட்டங்களை இயற்றச்செய்வது அவசியம்; அவற்றின் தலையாய கடமையும் கூட. நூலகச் சட்டம் நாடு முழுவதும் ஒரேசீராக அமைய நூலகச் சங்கங்கள் பாடுபடவேண்டும்என கேட்டுக் கொள்கிறேன்.

வங்காள நூலகக் கழகம் மேற்கொண்டுள்ள முறையான இடைவிடாத முயற்சிகளைப் பாராட்ட வேண்டும்.

காந்திய நூற்றுண்டு விழா கொண்டாடும் இவ்வேளையில், மக்களின் அபிமான அரசுகளை, நூலகச் சட்டம் இயற்றவைப்பது எளிதானதே. அரசுகள் அக்கறை

சோவியத்தில் நூலகம்

சோவியத் நூலகம் பண்பாட்டு அடித்தளமாக அமைந்து வாசகர்களுக்கு துணை புரிந்து, அறிவியல் அறிவு பெற உதவ வேண்டும். சமத்துவ சமுதாயத்தை உருவாக்கப் பயிற்சி யளிக்கவேண்டும்

— யாரோ

காட்டி, மக்களின் வேண்டுகோள் களை அரசுகள் உணர வைக்க வேண்டும். சங்கம் செய்ய வேண்டிய பணி எளிதானதே. உழைத்தால் உயர்வு உண்டு.

அடுத்த பத்தாண்டுகளுக்குள் மாநில அரசுகள் நூலகச் சட்டங்களையும், மத்திய அரசு தேசிய நூலகச் சட்டத்தையும் நிறைவேற்றி, நாடு முழுவதிலும் ஒரே சீரான, முறையான சிறப்புமிக்க நூலகப்பணி கிடைக்க ஏற்பாடு செய்வது மிகமிக அவசியமாகும். என் பிரார்த்தனையும் இதுவே.

நூலகர்கள்

இன்று நூலகத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் தொகை பல்கிப் பெருகியுள்ளது. ஆகவே நூலகச் சங்கம் வலிமையாக இருந்தால் தான் எதையும் சாதிக்க முடியும் என்பதை அனைவரும் உணர்ந்து செயல்படவேண்டும். நூலகர்கள் ஒரே அணியாக, ஒரே குரலில், நூலகர்களின் கோரிக்கைகளை வற்புறுத்தினால் வெற்றி கிடைப்பது உறுதியே. முன்னோடியாக நூலகச் சட்டத்தை நிறைவேற்ற அரசுகளை நிர்ப்பந்திக்கவேண்டும்.

பத்தாண்டுகளுக்கு முன்புவரை நூலகத் தொழிலில் ஈடுபட சிறந்த அறிவாளிகள் பெரும் எண்ணிக்கையில் முன்வரவில்லை. நூலகத் தொழிலில் வருந்தத் தக்க சம்பள விகிதம் இருப்பதே இக்குறைக்குக் காரணமாகும்.

கல்லூரி, பல்கலைக்கழகம் போன்ற உயர் கல்வி நிலையங்களில் பணிபுரியும் நூலகர்களின் சம்பள விகிதத்தையும் அவர்களின் அந்தஸ்தையும் ஆசிரியர்களுக்குச்சமமான அளவில் உயர்த்திய பெருமை வரதாச்சாரி சம்பளக்கமிஷனுக்கும், பல்கலைக் கழகக்கமிஷனுக்கும்உண்டு. நூலகர்கள் என்றும் நன்றிபாராட்டும் செயல் இது.

1958ல் பல்கலைக்கழக பண உதவிக்கமிஷன் நூலகக்கமிட்டித் தலைவராகப் பணிபுரிந்தேன். பல்கலைக் கழக பண உதவிக் கமிஷன் ஆசிரியர்களின்சம்பளவிகிதங்களை மாற்றியமைத்து உயர்த்திக் கொடுக்கும் போதெல்லாம் நூலகர்களின் ஊதிய விகிதங்களும் அதேபோல் உயர்த்தப்பட வேண்டும் என்ற சிபாரிசுகளை நூலகக்கமிட்டியும், பல்கலைக்கழக பண உதவிக் கமிஷனும் ஏற்றுக் கொண்டன.

மத்திய அரசும் நூலகர்களுக்கு உயர்ந்த சம்பள விகிதத்தைக் கொடுக்க மாநில அரசுகளுக்கு ஆணையிட்டுள்ளது. மாநில அரசுகள் இதை அமுலாக்காமல் இருப்பது ஏன்?

சில தீய சக்திகளின் திருவிளையாடல்கள் இதற்குக் காரணமாக இருக்கலாம். துரதிருஷ்டவசமான செயலே இது. சமீப கால சம்பள உயர்வை கல்லூரிநூலகர்கள் பெற முடியாமல் திண்டாடுகிறார்கள். விடிவுண்டா? விமோசனம் பிறக்குமா? 'ஆதிமூலமே'! என கஜேந்திரன் அழைத்தது போல, நாம், ''ஆண்டவனே! அருள்புரிவாய்'' என வேண்டுவோமா!

கல்லூரிகளில்உள்ளடிமான்ஸ்ட்ரேட்டர்களும் உடற்பயிற்சி ஆசிரியர்களும் பெறும் ஊதிய விகிதம், நூலகர்களின் ஊதியத்தைவிட உயர்ந்துள்ளது என்பது செய்தியாகும்.

கல்லூரிநூலகர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிகளை நீக்கி,

நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றி, திருத்தப்பட்ட ஊதிய விகிதங்களை உடனடியாகக் கொடுக்க மாநில அரசுகள் முன் வரவேண்டுமென மத்திய அரசு கண்டிப்பான உத்திரவைப் பிறப்பிக்க வேண்டுமென விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

நூலகர்களுக்கு அன்பு வேண்டுகோள்

சில நூலக நிர்வாகிகள், வாசகர்கள் ஆகியோர், நூலகப் பணியின் தரம் குறைந்து வருவதாகவும், நூலக அலுவலர்களின் எண்ணிக்கையை உயர்த்தியும், அவர் தம் சம்பளத்தைக் கூட்டிக் கொடுத்த பிறகும் சில இடங்களில், நூலகச் சிறப்புப் பணியாகிய 'லாங்ரேஞ் ரெபரென்ஸ் சர்வீஸ்' சரிவர நடைபெற வில்லை எனவும் புகார்கள் வருகின்றன.

நூலகத்தொழிலில் இத்தகைய துரதிருஷ்டவசமான போக்கு தலையெடுக்காவண்ணம் தடுத்து நிறுத்தி, நல்ல தரமான நூலகச் சேவையை அனைவரும் தொடர்ந்து பெற நூலகர்கள் உறுதியுடனும், உற்சாகத்துடனும் புன்னகையுடனும் உழைத்துப் பாடுபட்டு உதவ வேண்டும்.

நூலகச் சேவை இப்படித் திடீரெனத் தாழ்ந்து வருவதாகத் தோன்றும் 'மாயைக்கு' காரணங்கள் இரண்டைச் சொல்லலாம்.

நூலகக் கல்விப் போதனையின் தரம் குறைந்து வருவது ஒன்று. நூலகக் கல்வி நிலையங்கள் திடீரென பல மடங்கு பெருகி விட்டது மற்றொன்று. நூலகக்கல்வி போதிப்பவர்களுக்கு, போதிய

சோவியத் நூலகப் பட்டியல்

பட்டியல் முறையில் பொதுப் பட்டியலாகவும், உட்பிரிவாக வயதுக்கு ஏற்பவும் பட்டியல் தயாரித்து நூலகத்தில் வைத்துள்ளனர். பொதுப் பட்டியல் அகர வரிசைப்படியும், பகுப்பு முறையின் படியும் அட்டைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இளைஞர்கள் அகர வரிசைப்படி உள்ள பட்டியலைப் பெரிதும் விரும்பிப் பயன் படுத்திப் பலன் பெறுகிறார்கள்.

அனுபவமின்மையாலும், நூலகப் பணியில் உண்மையான ஈடுபாடு இல்லாமையாலும், டெக்னிகல் வேலைகளில் நுண்மை அறிவு குறைவாலும் ஆராய்ச்சி அனுபவமே இல்லாததாலும் அவர்கள் சிறப்பாக நூலகக்கல்வி போதிக்க இயலவில்லை எனக் கருதுகிறேன்.

இத்தகைய நிலை விரைவில் மறைந்து, நூலகக் கல்வியில் மறுமலர்ச்சி தோன்றும் என நம்புகிறேன். சென்னை, பிரிட்டிஷ் கவுன்ஸில் நூலகத்தில், இம் மாதம் நடைபெற்ற கருத்தரங்கில் இங்கிலாந்தைச் சார்ந்த நூலகக் கல்வி ஆசிரியர் திரு. லாங்ரிட்ஜ் இதற்கான புதிய உணர்ச்சியை தூண்டி விட்டு நம்பிக்கை ஒளியை ஏற்றிவிட்டுச் சென்றுள்ளார்.

இந்தியாவில், தமிழகத்தில் பொது நூலகச் சட்டம் நிறைவேறி இருபது ஆண்டுகள் ஓடி விட்டன. பொது நூலகர்களின் சம்பளம், அந்தஸ்து ஆகியவை இன்றும் அதளபாதாள நிலையிலேயே உள்ளது. திருப்தி அற்ற,

படுமோசமான நிலையேஎனலாம். நூலகச் சட்டங்களை ஏற்றுக் கொண்டுள்ள மாநில அரசுகள், பொது நூலகங்களில் பணி புரியும் நூலகர்களின் சம்பள விகிதத்தை உயர்த்திக் கொடுப்பது மிக மிக அவசியம். அவசர உணர்வுடன் கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினை இது. நல்ல அந்தஸ்தும் சம்பளமும் கிடைத்தால்தான், நூலகப் பணியில் உண்மை ஈடுபாடும் திறமையும், நூலக உணர்வும், ரசனையும் நூலககல்வி உயர்பயிற்சியும் அனுபவமும் பெற்ற சாமர்த்தியசாலிகள் தொடர்ந்து பொது நூலகங்களில் பணிபுரிய முடியும். இல்லையேல்...நல்ல சம்பளம் கிடைக்குமிடத்திற்கு அவர்கள் போய் விடுவார்கள்.

நூலக இயலின் பல்வேறு பிரிவுகளிலும் ஆராய்ச்சிகளை கூட்டாக -குழுவாக-சேர்ந்து மேற்கொண்டால்தான் நூலகப் பணியின் உண்மையான தரம் உயரும்.

நாடு முழுவதிலுமுள்ள நூலகச் சங்கங்கள் இத்தகைய ஆராய்ச்சி வேலைகளை தொடர்ந்து நடத்த ஏற்பாடு செய்வது அவசியம். அவற்றை ஒருங்கிணைத்துவளர்க்க வேண்டும். ஆராய்ச்சியின் பயனாக உருவாகும் சிறந்த பலன்களை, முடிவுகளை, நூலக இயல் பருவ ஏடுகளிலும், நூல்களாகவும் வெளியிட்டு சகோதர நூலகர்களின் நன்மைக்காகப் பாடுபட வேண்டும்; பயன்பெறச் செய்ய வேண்டும்.

மாநில அரசுகள், மத்திய அரசு, நூலகச்சங்கங்கள், நூலகர்கள் ஆகியோர்மும்முனையிலும் முனைப்பாக விழிப்பாக ஒருவருக் கொருவர் ஆதரவாக தங்கள் கடமைகளைச் செய்து, உரிமைகளைப் பெற பாடுபடவேண்டும்.

இத்தகைய சிந்தனைகளை வளர்க்கவும் நாட்டு மக்கள் நல்ல தரமான நூலகப்பணி பெறவும் செய்வதே, தேசிய நூலக வார விழாக்களின் லட்சியமாகும். இந்த ஆண்டு நவம்பர் 14 முதல் 20வரை இந்தியா முழுவதும் நடைபெற்ற தேசிய நூலக வார விழாக்கள் இத்தகைய நல்ல சிந்தனைகளை அனைவர்மனத்திலும் ஏற்படுத்தியிருந்தால், அதுவே நூலகத் தொழிலுக்கு வெற்றியாகும்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு

நூலகர்களே! ஒன்றுபடுங்கள். கடமைகளை சிறப்பாகச் செய்யுங்கள். தேவையான உரிமைகளைப் பெறுங்கள்.

வெற்றி நமதே!

★

அரை அங்குல நூல்

ஐவான் ச்ரைலொவ் எழுதிய மிகச் சிறிய நூல் - அரை அங்குலத்தை விடச் சற்றுப்பெரியது. அதன் தலைப்பு ''கட்டுக்கதைகள்.'' இச் செய்தி கட்டுக் கதையல்ல

சிவராம காரந்த்

மணவை முஸ்தபா



கல்விக்கெனப் பல்கலைக் கழக வாசற்படியைக்கூட மிதிக்காத போதிலும் 'பல்கலைச் செல்வர்' எனப் பலராலும் பாராட்டப் படும் கன்னட எழுத்தாளர் சிவ ராம காரந்த் வாழ்க்கையில் எத்தனை படிகள் உண்டோ அத்தனை படிகளிலும் வாழ்ந்த அனுபவ நிறைகுடமாக இன்று விளங்கி வருபவர். அவரது படைப்புக்களில் நடமாடும் பாத் திரங்கள் ஒவ்வொன்றும் அவரது பரந்த அறுபவத்தின் சாயல் களாகவே விளங்குகின்றன.

இன்றைய கன்னட இலக்கியத் துறையில் கவிதையைத் தவிர இவரது கைவண்ணம் பெறுத இலக்கியத் துறைகளே இல்லை எனலாம். ஆயினும் தலை சிறந்த நாவலாசிரியர் என்ற முறை யிலேயே இவர் இலக்கிய உலகில் சிறப்பான முதலிடம் பெறுகிருர்.

சுமார் நாற்பத்தைந்து ஆண்டு கட்கு முன்னர் புதினங்களை எழுதத் தொடங்கிய இவர் இது வரை இருபத்தைந்துக்கு மேற் பட்டபுதினங்களைப் படைத்தளித் துள்ளார். அவரது ஆரம்ப கால புதினமான 'கன்யாபலி' யிலிருந்து அண்மையில் வெளி வந்த 'ஆழ -நிராழ' (ஆழமும் ஆழமற்ற தன்மையும்) வரை

அவருடைய புதினங்கள் அனைத்தும் அவரது எழுத்தாற்றலும் அனுபவச் சிறப்பும் ஒருங்கே கொண்டு திகழ்கின்றன.

காரந்தின் புதினங்களிலே பெருஞ் சிறப்புக்குரிய தலைசிறந்த புதினப் படைப்பாக விளங்குவது 'மரளி மண்ணிகே' (திரும்பவும் மண்ணிற்கு) என்பதேயாகும். மேற்குத் தொடர்ச்சி மலைக்கும் அரபிக் கடலுக்கும் இடைப்பட்ட நிலப் பகுதியில் வாழும் தென் - கனராப் பகுதி மக்களின் வாழ்க்கையையும் பண்பாட்டையும் கருவாகக் கொண்டுள்ள இப் புதினத்தின் கதை ஒரு தலைமுறையின் கதையாக அமையாது மூன்று தலைமுறைகளைப் பற்றிய கதையாக அமைந்துள்ளது. 1850இல் தொடங்கும் இக்கதை 1940 இல் முடிகிறது. தான் பிறந்த மண்ணின் வாடையை-மக்களின் வறுமை வாழ்வை- அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறார் காரந்த். மூன்று தலைமுறைகளாக அப்பகுதி மக்களின் வாழ்வில் எழுந்த எண்ணற்ற வாழ்க்கைப் பிரச்சினைகளையும் அப்பிரச்சினைகளை அவர்கள் அணுகிய முறைகளையும் அற்புதத் திறமையோடு விளக்கியுரைக்கிறார் ஆசிரியர் காரந்த்.

பதினைந்தாண்டுகட்கு முன்னரே இந்நூலின் ஆங்கில பெயர்ப்பு வெளிவந்துள்ளது. சாகித்திய அகாதெமியின் முயற்சியால் தமிழ் உட்பட பல் வேறு இந்திய மொழிகளிலும் இந்நூல் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

அவரது படைப்பாற்றலுக்குச் சான்றுகூறும் மற்றொரு சிறந்த புதினம் 'பெட்டத ஜீவா' (மலை வாழ்க்கை) என்பதாகும்.

மலைமீது வாழ்ந்துவரும் ஒரு தனி மனிதனின் வாழ்க்கையை புதின வடிவில் சித்தரிக்கிறது இந்நூல். ஒரு தனி மனிதனின் வாழ்க்கையையே ஒரு புதினப் படைப்பாக உருவாக்கிய சிறப்பு போற்றிப் பாராட்டுதற்குரிய ஒன்றாகும்.

சோம என்ற தாழ்த்தப்பட்டவன் ஒருவனின் வாழ்க்கையை, அவன் ஆசைகள், அச்சங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றை விளக்கும் 'சோமன துடி' (சோமனின் துடி ஓர் இசைக் கருவி) என்ற சிறு நாவல் இருபத்தைந்தாண்டுகட்கு முன்பு எழுதப்பட்டதாயினும் இன்றும் சோமனின் அவலம் நிறைந்த சோக வாழ்வு படிப்போர் உள்ளத்தை நெக்குருகச் செய்வதாகவே உள்ளது.

பழங்குடி மக்களின் வாழ்வை உள்ளது உள்ளவாறே சுவை குன்றாது படம் பிடித்துக் காட்டுவதில் கைதேர்ந்தவர் காரந்த். அவர் பழங்குடியினரில் ஒருவராக சில காலமேனும் வாழ்ந்து அவர்கள் வாழ்வின் அடிப்படைத் தன்மைகளை நன்கு அறிந்துணர்ந்து அதன் பின்னரே அவர்களது வாழ்வுக்கு கற்பனை மெருகேற்றி கதை வடிவில் வடித்துக் கொடுக்கிறார்.

இவ்வகையில் பெருஞ்சிறப்புக்குரிய புதினமாக இன்று விளங்குவது 'குடியர கூசு' (குடியரின் குழந்தை) என்பதாகும். மேற்குத் தொடர்ச்சி மலையில் வாழும் புராதன குடியரின மக்களின் வாழ்க்கையை விளக்கும் காவியமாகவே விளங்குகிறது இப் புதினம்.

காரந்தின் புதினங்கள் அனைத்துமே கர்நாடக மக்களின் வாழ்க்கையையும் பண்பாட்டையும்

அம்மண்ணிற்கேயுரிய இயல்பான தன்மையையும் பிரதிபலிப்பன வாக அமைந்துள்ள போதிலும் அவை இந்திய வாழ்க்கையை— பாரதப் பண்பாட்டின் சாயலைப் பிரதிபலிக்காமல் இல்லை.

உள்ளதை உள்ளவாறே சித்தரிப்பது காரந்தின் தனி இயல்பு. வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் காணும் குறை நிறைகளையும் நன்கு ஆய்ந்தறிந்து அவற்றை தமக்கே யுரிய முறையில் கதைப்போக்கில் சுவை பட விவரித்துக் கூறுகிறார். தமது சொந்த விருப்பு வெறுப்புக்களை தாம் படைக்கும் கதாபாத்திரங்கள் மூலம் சுமத்தி நடமாடவிடும் போக்கு இவரிடம் எப்போதுமே காணப்படாத ஒரு அம்சமாகும். சமுதாய கோணல் நிலைகளை நாசுக்காகத் தாக்குவதில் இவர் கை தேர்ந்தவர். 'தேவ தூதரு' 'ஹள்ளிய ஹத்து சமஸ்தரு' (கிராமத்தில் பத்துப் பெரிய மனிதர்கள்) 'கர்பகுடி' (மூலத்தானம்) முதலியன இதற்குத் தக்க சான்றாக அமையும் அங்கதப் படைப்புகளாகும்.

புதினங்களையன்னியில் சிறு கதைகளையும் 'கீசா கௌதமி' போன்ற இசை நாடகங்களையும் 'அபூவி நிண்ட பாராமக்கெ' (அபூவிலிருந்து பாராம வரை) 'அபூர்வபஸ்கிம்' (கிழக்கல்லாத மேற்கு) முதலிய பயண நூல்களையும் எழுதியுள்ளார். அவரது பரந்த அனுபவங்களை அடித்தளமாகக்கொண்ட 'பித்து மனதின் பத்து முகங்கள்' என்ற அவரது சுய வாழ்க்கை வரலாற்று நூல் அவரை நன்கு அறிந்துணர விரும்புவோர்க்கு உதவும் உரைகல்லாக விளங்குகிறது.

நாடகம், நடனம், ஓவியம், திரைப்படம் முதலியகலைத்துறைகள் பலவற்றிலும் ஈடுபட்டு சோதனைகள் பல செய்து பார்த்த காரந்த் சிறுவர் இலக்கியத் துறைக்கு ஆற்றியுள்ள தொண்டு கொஞ்ச நஞ்ச மல்ல.

தலைசிறந்த புதின ஆசிரியர் என்பது போன்றே புகழ் பெற்ற சிறுவர் இலக்கிய எழுத்தாளராகவும் இவர் விளங்குகிறார். பல அறிஞர்கள் இணைந்து செயல்படும் அமைப்புகளால் கூட சாதிக்கமுடியாத பல சாதனைகளை வியப்பூட்டும் வகையில் நிகழ்த்தி வெற்றி கண்டிருக்கிறார். 'பால பிரபஞ்ச' (குழந்தைகளுக்கான கலைக்களஞ்சியம்-மூன்று தொகுதிகள்) 'கன்னட—கன்னட அகராதி' (கன்னட மொழியிலே முதல் அகராதி) 'விஞ்ஞான பிரபஞ்ச' (பொது மக்களுக்கான விஞ்ஞானக் கலைக்களஞ்சியம்-ஐந்து தொகுதிகள்) அவரது ஆற்றலையும் அயராத உழைப்பையும் உலகுக்குணர்த்தும் அசுர சாதனைகளாகும்.

1902 - ஆம் ஆண்டில் பிறந்த சிவராம காரந்த் பல்கலைக் கழகப் படிப்பு வரை எட்டவில்லையென்றாலும் அவரது அரிய இலக்கியத் தொண்டைப் பாராட்டி கர்னாடகப் பல்கலைக் கழகமும் மைசூர்ப் பல்கலைக் கழகமும் 'ஆனரரி டாக்டர்' பட்டமளித்

நூலும் முன்னேற்றமும்

எவனொருவன் நூல்களுடன் நல்ல தொடர்பு கொள்ள வில்லையோ, அவன் முன்னேற்றம் காணமுடியாது.

குருஷா

துப் பெருமைப் படுத்தியுள்ளது. 1960 ஆம் ஆண்டில் 'யக்ஷகான பயலாடா' (திறந்த வெளி யக்ஷ கான நாடகங்கள்) என்ற கர்னடக நாடோடி நடன-நாட கங்களைப் பற்றிய நூலுக்குப் பரிசளித்துப் பெருமைப் படுத்தியுள்ளது. அதே நூலிற்கு ஸ்வீடிஷ் நாடோடி நாட்டியக் கழகமும் மைசூர் அரசாங்கமும் பரிசளித்துப் பாராட்டியுள்ளன.

அறுபத்தியேழு வயதைக் கடந்து நிற்கும் காரந்த் இன்றும் இளைஞரைப் போலவே துடிப் போடு பல புதிய இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்.

நூலாசிரியராகவும் கன்னட நூல் வெளியீட்டாளராகவும் சுதந்திரமான எழுத்துப் பணி யாற்றி வரும் இவர் ஆரம்ப நாட்களில் கன்னட மொழித் திங்க ளிதழ் ஒன்றின் ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

நிறை புகழ் பெற்றிருந்த போதிலும் 'மிகவும் பிடிவாதக் காரர். கர்வம் மிக்கவர்; யாரோ டும் ஒத்துப் போகும் இயல்பு இல்லாதவர்' என்ற அவப் பெயரையும் சிலர் சுமத்தவே செய் கின்றனர்.

மக்களைப் பற்றியும் வாழ்க்கையைப் பற்றியும் இவருக்கு அழுத் தமான கொள்கைகள் உண்டு. அவற்றில் இவருக்குத் திடமான நம்பிக்கையும் உண்டு. எனவே இவர் நம்புவனவற்றை இவர் ஒளிவு மறைவு இன்றி அழுத்தந் திருத்தமாகக் கூறுகிறார். நிறை கண்ட விடத்து வெளிப்படையாக அதனை வானளாவப் புகழ் வதும் குறை கண்டபோது அதனைக் கடிந்துரைப்பதும் இவரது இயல்பாக இருப்பதனால் தானோ என்னவோ இவருக்கு இந்த அவப் பெயர் ஏற் பட்டுள்ளது.

கன்னட மொழி இலக்கியத் தின் - குறிப்பாகப் புதின இலக் கியத்தின் வளர்ச்சிக்கு அளவு கோலாக விளங்கும் சிவராம காரந்தின் புகழ் கன்னட மொழி உள்ளளவும் நிலை பெற்றிருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

★

பொது நூலகமும் நோக்கமும்

பொது நூலகத்தின் நோக்கம் சமுதாயத்தின் நோக்கத்தைப் பொறுத்தே நிறைவேற முடியும். நூலகத்தின் நோக்கத்தை மக்கள் எப்பொழுது புரிந்து கொண்டு அதற்கேற்றபடி நடக்கிறார்களோ, அப்பொழுதுதான் நூலகம் தனது கடமையை உணர்ந்து செயலாற்ற முடியும்; மக்களுக்குப் பயன் அளிக்க முடியும்.

— செஸ்ஸி எட்ஷெரா

சென்னையில் நூலக விழாக்கள்

'நூலகமும், கல்வியும்' கருத்தரங்கு

'நூலகமும் கல்வியும்' என்ற தலைப்பில் சென்னை பிரிட்டிஷ் கவுன்ஸில் ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கு 1969ம் ஆண்டு நவம்பர் மாதம் 11ம் தேதி முதல் 13ந்தேதி வரை மிகச்சிறப்பாக நடைபெற்றது. திருமதி குமார் திரு குமார் திட்டமிட்டுச் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். தென் மாநிலங்களைச் சார்ந்த பிரபல பல்கலைக் கழக, கல்லூரி, பொது நூலகர்கள் பலர் கலந்து கொண்டனர்.

உயர் நிலைக் கல்வி பெறும் மாணவர்களின் எண்ணிக்கைப் பெருக்கத்திற்கு ஏற்ப நூலகப் பணியையும் பெருக்குவது எப்படி என்பது பற்றியும், சிறப்பு நூலகங்கள் பணியாற்றும் முறை எப்படி அமையவேண்டும் என்பது பற்றியும், நூலகத் துறைக் கல்வி எவ்வாறு உருவாக்கப்பட்டு, எங்ஙனம் போதிக்கப்பட வேண்டும் என்பது பற்றியும் விவாதங்கள் மிகச்சிறப்பாக—பயனுள்ளதாக-நடைபெற்றன.

கடைசி நாளன்று கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கி நடத்திக் கொடுத்த திரு. எல். டபுள்யு லாங்ரிட்ஜ் (நூலகவியல் பேராசிரியர், லண்டன் நார்த்வெஸ்டர்ன்ஸ் பாலி டெக்னிக்) தனது முடிவுரையில் கூறிய கருத்துக்களின் சாரமாவது: 'அறிவு என்றால் என்ன? அது எப்படி உருவாகிறது? அவை அடங்கிய நூல்கள் எப்படி உள்ளன? அவற்றை நூலகப் பயனுக்காக எவ்வாறு தேர்ந்தெடுப்பது? தேர்ந்தெடுத்ததைஎவ்வாறு மிகச்சிறப்பாக பயன்படுத்துவது? என்பதில் தான் நூலகர் சேவையின் வெற்றி அமைந்திருக்கிறது.'

நூலகத் துறையில் உலகுக்கே வழிகாட்டியாக விளங்கி வரும் ஒப்பற்ற இந்திய நூலக விஞ்ஞானி டாக்டர் எஸ். ஆர். ரங்கநாதன் அவர்களின் பணிகளையும் சிறப்புகளையும் புகழ்ந்துரைத்தார் திரு லாங்ரிட்ஜ்.

பரிசுகள் வழங்கப்பட்டு திரு. லாங்ரிட்ஜ் கௌரவிக்கப்பட்டார்.

கருத்தரங்கு பயனுடனும் நிறைவுடனும் முடிவுற்றது.

நூலகப்பணித் தொடர் சொற்பொழிவு ஆரம்பவிழா

அமெரிக்க நாட்டில் ''ரெபரென்ஸ் சர்வீஸ்'' மிகச்சிறப்பாக நடைபெறுவதை தனது அனுபவத்தால் கண்டறிந்து வந்து புகழ்ந்துரைத்ததுடன், தமிழக நூலகங்களிலும் இத்தகைய பணி சிறப்பாக இல்லையே என குறைபட்டுக் கொண்டார் தமிழ்நாடு பொது நூலக இயக்குநர் திரு. எஸ். வி. சிட்டிபாபு அவர்கள். தேசிய நூலக வார விழா நடைபெறும் இச்சமயத்தில் புதிய இயக்குநரின் பேச்சு நூலகத் துறைக்கு நம்பிக்கையூட்டுவதாக அமைந்திருந்தது.

சென்னை மாவட்ட மத்திய நூலகமும், சென்னை மறைமலை அடிகள் நூலகமும் கூட்டாக ஏற்பாடு செய்திருந்த ''நூலகப் பணித்தொடர் சொற்பொழிவு'' ஆரம்ப விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையிலேயே இவ்விதம் குறிப்பிட்டார் நூலக இயக்குநர்.

18-11-69 மாலை மாவட்ட மைய நூலகத்தில் நூலகப்பணித் தொடர் சொற்பொழிவு ஆரம்பமாயிற்று. திரு ஆர். ஜனார்த்தனம் நாயுடு தனது முதல் சொற்பொழிவை ஆங்கிலத்தில் நிகழ்த்தினார். திரு. சுப்பையா பிள்ளை (மறைமலை அடிகள் நூலகச் செயலாளர், கழகத்தலைவர்) அனைவரையும் வரவேற்றார்.

சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழு செயலாளர் திரு. ஏ. ஆர். கான் தனது நன்றியுரையில் இது போன்ற கூட்டு முயற்சியை வரவேற்றார். ''திறமையான நூலகப்பணி கிடைத்திட இத்தகைய உரைக் கோவைகள் அவசியம்'' என்றார்.

சென்னைப் பல்கலைக்கழக நூலகத்தில் தேசீய நூலக வார விழா

சென்னைப்பல்கலைக்கழக நூலகத்தில் தேசீய நூலக வார விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அப்போது நூல் காட்சியும் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பிரபல ஆங்கில, தமிழ் புத்தகப்பதிப்பாளர்கள், விற்பனையாளர்கள் கலந்து கொண்டார்கள்.

15-11-69 காலை புத்தகக் காட்சி துவக்கி வைக்கப்பட்டது.

18-11-69 படக்காட்சி நடந்தது.

20-11-69 சென்னை பச்சையப்பன் கல்லூரி நூலகர் திரு. ப. செங்கல்வராயன் அவர்கள் உரையாற்றினார். தனது நீண்டநாள் நூலக அனுபவங்களை சுவைபட எடுத்துக் கூறினார்.

ஆரம்பவிழாவின்போது நூலக இயல் கல்வி துறையைச் சார்ந்த திரு. P. A. மோகன் ராஜ், 'சென்னைப் பல்கலைக் கழகம் பற்றிய வரலாறும் பணியும்,' 'தேசிய நூலக வாரம்' பற்றிய குறிப்புகள் அடங்கிய சிறு வெளியீட்டை வெளிக்கொண்டு வந்து பயனைக் கூட்டினார்.

ஆரம்ப விழாவன்று பல்கலைக் கழக நூலகத் துறை பேராசிரியர் டாக்டர் டி. பி கிருஷ்ண ராவ் அனைவரையும் வரவேற்றார். பல்கலைக்கழக நூலகர் திரு. V. S. முத்தையா நன்றி கூறினார். விழாவை திரு பாலசுப்ரமணிய ஐயர் துவக்கி வைத்தார்.

—'ஈகிள்'

இந்திய நூலகத் தந்தை

டாக்டர் எஸ். ஆர். ரங்கநாதன்

இரா. முத்துக்குமாரசாமி

1964 ஆம் ஆண்டு, ஜூன் மாதம்; முதல் நாள். அமெரிக்க நாடு; பிட்ஸ்பர்க் பல்கலைக் கழகம். சிறப்புப் பட்டமளிப்பு விழா நடைபெறுகிறது. பட்டம் பெறுபவர் மூவர். அவர்களுள் ஒருவர் இந்தியர்; அதுவும் தமிழர். பட்டம் பெற விருப்ப வரைப் பல்கலைக்கழக வேந்தருக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறார் டாக்டர் ஹெரால்ட் லான்கர். அவர் பல்கலைக் கழக நூலகப்பட்டப் படிப்புக் கல்லூரியின் தலைவர்.

'வேந்தரவர்களே, சீயாழி ராமாமிருத ரங்கநாதன் அவர்களை அறிமுகப்படுத்தும் பேற்றை நான் பெற்றுள்ளேன். அவர் இந்தியாவின் தற்கால நூலகர் பணியின் தந்தையெனப் பலராலும் போற்றப் பெறுபவர். நம் காலத்தின் உண்மையிலேயே தலையாய நூலகர்களில் அவர் ஒருவர். நாற்பத்தொரு ஆண்டு கட்கு முன்பு சென்னைப் பல்கலைக் கழகத்தில் கணக்கியல் பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த சீயாழி ரங்கநாதன் 'சமூகத்திற்குச் சிறந்த பணியாற்றும் வாய்ப்பை அளிப்பது' நூலகர் பணியே என்ற முடிவுக்கு வந்தார். அது தலை சிறந்த முடிவாகும். அவர் பணியாற்றத் தேர்ந்தெடுத்த சமூகம் உலகமாகவே மாறிவிட்டது.

வாழ்க்கையில் சிறிதளவு வெற்றி பெற்றுள்ளவர்களுக்குப் பேராசிரியர் பெற்றுள்ள வெற்றிகள் நம்ப முடியாதனவாகத் தோன்றும்.

ஐம்பத்தைந்து நூல்கள், நூலகததுறையில் நூற்றுக்கணக்கான

கட்டுரைகள் ஆகியவற்றுக்கு அவர் ஆசிரியர். திறமைமிக்க பல்கலைக்கழக நூலக நிர்வாகி; ஊக்கமும் ஒத்துணர்வுமுடைய நல்லாசிரியர்; எண்ணற்ற நூலக, கல்வி அனைத்துலக மாநாடுகளில் கலந்துகொண்டவர்; அவற்றைத் தம் நுண்ணறிவுத் திறனுலும் ஆழ்ந்து அகன்ற சிந்தனைத்திறனுலும் சுவைபட ஆக்கியவர். அறிவுத்துறை அமைந்த வண்ணத்தை ஆராய்ந்து புதிய நோக்குடன் கூடிய பாகுபாட்டு முறையைக் கண்டு பிடித்தவர். இன்றைய நூலக, தகவலறிவிப்பு இயல்கள் ஆகியவற்றின் அமைப்பு இவர் நூற் பாகுபாட்டுத் துறையில் கண்டு பிடித்த ஆராய்ச்சியின் மேலேயே எழுந்துள்ளது.

இவர், தம் ஊக்கம், ஆற்றல், எண்ணம் அனைத்தையுமே நூலகப் பணிக்காக வழங்கியுள்ளார். அவ்வாறே தம் பொருளையும் வழங்கி விட்டார். 1956–ல் தாம் வாழ்நாள் முழுவதும் சேர்த்து வைத்திருந்த தொகை முழுவதையும் 'சாரதா ரங்கநாதன் நூலக இயல் இருக்கையை' அமைப்பதற்காகச் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு வழங்கியவர்.

வேந்தரவர்களே, இத்தகு பெருமைபடைத்த சீயாழி ராமாமிருத ரங்கநாதன் அவர்களை 'டாக்டர் ஆப் லெட்டர்ஸ்' என்ற பட்டம் பெறுவதற்கு அறிமுகப் படுத்துகின்றேன்.''

பட்டத்தை வழங்குமுன் வேந்தர் டாக்டர் லிச்பீல்ட் கீழ்க் கண்ட பாராட்டுரையைப் பகன்ருர்.

''நூலகர் குலத்தலைவரே! வளமிக்க நூலாசிரியரே! புதுமை புனைவோரே! புகழ்மிக்க பேரறிஞரே! நூலகக் கல்வித்துறையில் தலைமைப் பொறுப்பேற்று அதன் வழியாக அறிவைப் பரப்புவதில் தளராத உங்கள் முயற்சிக்காக; பகுப்பு முறையிலும் பட்டியல் முறையிலும் புதிய முறைகளைக் கண்டு பிடித்தமைக்காக; உலகெங்கணுமுள்ள பல்வேறு அரசுகளுக்கும்பல்கலைக்கழகங்களுக்கும் ஆற்றலும் அறிவுமிக்க உங்கள் அறிவுரைகளை வழங்கியமைக்காக உங்களுக்கு 'டாக்டர் ஆப் லெட்டர்ஸ்' என்ற பட்டத்தை நான் வழங்குகின்றேன்.''

இவ்வாறு இந்திய நூலகத் தந்தை டாக்டர் சீ. ரா. ரங்கநாதன் தம்முடையஇரண்டாவது 'டாக்டர்' பட்டத்தைப் பெற்ருர். எடுத்ததெற்கெல்லாம் அமெரிக்காவை நாடும் ஒரு நாடான இந்திய நாட்டின் அறிஞர் ஒருவரை அமெரிக்கா பட்டம் வழங்கிப் பாராட்டியது என்ருல் அது தன்னுடைய பெருமையை உயர்த்திக் கொள்ள அப் பட்டத்தை அவருக்கு வழங்கியது என்றே கூறலாம்.

அவருக்கு முதன்முதல் டாக்டர் பட்டம் கொடுத்துப் பாராட்டியது டில்லிப் பல்கலைக் கழகமாகும்.

நாடு விடுதலை பெற்றவுடன் விடுதலைக்குழைத்த பெருமக்களுக்கு 'டாக்டர்' பட்டம் வழங்கியது டில்லிப் பல்கலைக் கழகம். பேராசிரியர் ரங்கநாதன் பெருந்தலைவர்களான ஜவகர்லால் நேரு, சாகிர் உசேன், அபுல்கலாம் ஆசாத் முதலியோருடன் 'டாக்டர்' என்ற பட்டம்பெற்ருர்.

அப்பொழுது அப்பல்கலைக் கழகத்தின் வேந்தராயிருந்தவர்

பெருந்தகை மவுன்ட்பேட்டனு ரும். வேந்தருக்கு அறிமுகப் படுத்தியவர் பல்கலைக் கழக துணை வேந்தர் சர் மாரிஸ்குயர்.

அவர் படித்த அறிமுகவுரை:— "ஐயா, இந்திய நூலகச் சங்கத் தின் தலைவரான சீயாழி ராமா மிருத ரங்கநாதனைத் தங்களுக்கு அறிமுகப்படுத்துகிறேன். அவர் சென்னைப் பல்கலைக் கழகத்தின் பட்டதாரி; கணக்குத் துறையில் ஆசிரியராகத் தம் வாழ்வைத் தொடங்கியவர்; இருபத்தொரு ஆண்டுகள் சென்னைப் பல்கலைக் கழகத்தின் நூலகராக விளங்கி யவர்; ஈராண்டுகள் காசிப் பல் கலைக்கழக நூலகராகப் பணி யாற்றியுள்ளார். இவர்தான் **இந்திய நூலக இயக்கத்தின் தந்தை.** இந்தியாவில் நூலக உணர்வு ஏற்பட ஒப்பாரும் மிக் காருமின்றி உழைத்தவர். சில வாரங்களுக்கு முன்னுல் இந்தியா விலேயே முதல் மாநிலமாகச் சென்னை மாநிலம் கொண்டு வந் துள்ள முதல் நூலகச் சட்டம் இவர் பெற்ற குழந்தைதான். நூலக இயலின் ஒவ்வொரு பிரி வைப் பற்றியும் இவர் நூல்கள் எழுதியுள்ளார் என்பதோடு அவையே தனி நூலகமாக அமையுமளவுக்கும் உள்ளன. இவருடைய புகழ் இந்திய நாட் டின் எல்லையைக் கடந்து பரவி யுள்ளது. எந்தெந்த நாடுகளில் நூல்களும் நூலகங்களும் மதிக்கப் பெறுகின்றனவோ அந்தந்த நாடு களிலெல்லாம் இவர்தம் கருத் துரைகளும் அறிவுரைகளும் மதிக் கப் பெறுகின்றன.

சீயாழி ராமாமிருத ரங்க நாதனுக்கு 'டாக்டர் ஆப் லெட்டர்ஸ்' என்ற பட்டத்தைத் தாங்கள் மகிழ்ச்சியுடன் வழங்க வேண்டுகிறேன்."

நூலும் நூலகமும்

"நூலகங்களுக்கு நான் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறேன்...... நூல்களுக்கு அபார சக்தி உண்டு"

— லெனின்

பேராசிரியர் ரங்கநாதன் அவர் கள் டாக்டர் ரங்கநாதனுகிய வரலாறு இது.

டாக்டர் ரங்கநாதன் அவர் களுக்குப் பாராட்டுரைகளும் பட்டங்களும் புதியனவல்ல. அவரைப்பாராட்டாதார் இல்லை. அவர் பெருத பட்டங்களில்லை. மேலாக அவர் பாராட்டிற் காகவோ அல்லது படடத்திற் காகவோ உழைக்கவில்லை. ஊர் மெச்ச உழைக்காதவர் அவர். உழைப்பை உழைப்புக்காகவே உழைத்தவர். அதனுல்தான் அவருக்குப் பாராட்டுரைகளும் பட்டங்களும் குவிந்தன.

'நூலக இயலின் இந்தக்காலம் ரங்கநாதனுடையகாலம்' என்ருர் பகுப்பு முறைக்கு அறிமுகம் என்ற அரிய நூலெழுதிய ஆங்கில நாட்டறிஞர் பெர்விக்சேயர்ஸ். "உலகெங்கனுமுள்ள நூலக வட்டங்களில் போற்றப்படும் அறிஞர் டாக்டர் ரங்கநாதன்" என்று பாராட்டியுள்ளது 'பிரிட் டிஷ் புக் நியூஸ்.' 'இந்த நூற் ருண்டில் வாழ்கின்ற நூலகர் களில் தலைசிறந்தவர், பேரறிஞர்' என்றெல்லாம் பலர் பாராட்டி யுள்ளனர்.

இந்தியாவை அன்னியர் ஆண்டு வந்த காலத்திலேயே அன்னியரின் அரசு 1935இல் பேராசிரியர்

படிப்பும் பயனும்

சோவியத் மக்களது படிக்கும் ஆர்வம் எல்லையில்லாதது. வாசகர்கள் அறிவைப் பெறுவதற்காக மட்டும் படிப்பது இல்லை; பாலைவனத்தில் நீரூற்றுக்களைத் தோண்டவும், நதிகளின் வளத்தை நிலப் பகுதிகளுக்குத் திருப்பவும், புதிய மாநகர்களை நிர்மாணிக்கவும், வானவெளியைத் தன் வயப்படுத்தவும் முனைகிறார்கள்.

ரங்கநாதனை 'ராவ் சாகிப்' என்ற பட்டம் கொடுத்துப் பாராட்டியுள்ளது,

1955-ல் டாக்டர் அனைத்துலக டாகுமெண்டேசன் சங்கத்தின் மதிப்புக்குரிய உறுப்பினராக ஆக்கப்பட்டார்.

இந்திய அரசு டாக்டரின் நூலகத் தொண்டைப் பாராட்டி 1956-ல் 'பத்மஸ்ரீ' என்ற விருதை அவருக்கு வழங்கிப் பாராட்டியது.

பிரிட்டிஷ் நாட்டிலுள்ள 'நூலகச் சங்கம்' டாக்டர் அவர்களை அவர் தம் வாழ்நாள் முழுவதும் தன்னுடைய துணைத் தலைவராகஇருக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளது. இப் பெருமை வேறெந்த வெளி நாட்டினருக்கும் எளிதில் கிடைக்க முடியாத தொன்றாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக அவர் 1966ஆம் ஆண்டில் இந்திய அரசினரால் தேசிய நூலக ஆராய்ச்சிப் பேராசிரியராக நியமிக்கப் பெற்றுள்ளார். அவர் தம் வாழ்நாள் முழுவதும் இப் பொறுப்பை ஏற்றிருப்பார். மாதமொன்றுக்கு ஆயிரத்தைந்நூறு ரூபாய் ஊதியம் பெறுவதுடன் ஆயிரம் ரூபாய் செலவில் அவர் தமக்குக் கீழே ஆராய்ச்சித் துணைவர்களையும் அலுவலர்களையும் வைத்துக் கொள்ளலாம்.

இத்தனை வசதிகளையும்இத்தனை பாராட்டுரைகளையும் இத்தனை பட்டங்களையும் பெற்றுள்ள டாக்டர் ரங்கநாதன் அவர்கள் வயது முதிர்ந்த இந்நிலையில் ஓய்வெடுக்கிறாரா என்றால் இல்லை என்றே கூற வேண்டும். ஓயாது ஒழியாது நூலகத் தொண்டைப் பற்றிய சிந்தனையிலேயே ஈடுபட்டுத் தம் உடல், பொருள், ஆவி அனைத்தையுமே நூலக இயலுக்கு அர்ப்பணித்துள்ளார்.

டாக்டர் ரங்கநாதன் நூலகத் துறையில் உலகமுழுவதிலுமுள்ள பேரறிஞர்கள் சிலரில் ஒருவராவார். அறுபதுக்கு மேற்பட்ட அரிய, அளவில் பெரிய நூல்களை அவர் இயற்றியுள்ளார். எனினும் நூல்களைப் பகுப்பதற்கு அவர் கண்டுபிடித்துள்ள 'கோலன் பகுப்புமுறை' அவரை உலகறியச் செய்தது. இவ்வுலகில் தற்பொழுது வழக்கிலிருக்கும் சிறந்த ஏழு நூல் பகுப்பு முறைகளில் 'கோலன் பகுப்பு முறை'யும் ஒன்றாகும்.

'கோலன் பகுப்பு முறை'யைப் பல பல்கலைக்கழக நூலகங்களும், கல்லூரி நூலகங்களும், பொது நூலகங்களும் பயன்படுத்துகின்றன. மேலை நாடுகளிலும் சில நூலகங்கள் இம்முறையைப் பின்பற்றுகின்றன. இங்கிலாந்தில் பயிற்சி பெறும் நூலகர்களில் சிலர் 'கோலன் பகுப்பு முறை' யிலும் தேர்வு பெறுகின்றனர்.

அனைத்துலக நூலக இயல் மாநாடுகள் பலவற்றில் டாக்டர் ரங்கநாதன் பங்கெடுத்துக் கொண்டுள்ளார். அயல் நாடுகளுக்குப் பத்து முறைகளுக்கு மேல் சென்றுள்ளார்.

பிறரெல்லாரும் அயல் நாடுகளுக்குச் சென்று அங்குள்ள சிறப்புக்களை நம் தாயகத்திற்கு எடுத்து வந்தனர். டாக்டர் ரங்கநாதன் ஒருவர் மட்டுமே ஒவ்வொருமுறையும்வெளிநாடுகளில் நம் தாய் நாட்டின் பெருமையை நிலை நாட்டிவந்துள்ளார்.

நூலக இயலைப்பொறுத்த வரை உலக நாடுகளுள் இந்தியாவும் பெயரும் புகழும் பெற்று விளங்குகிறது என்றால் அது டாக்டர் ரங்கநாதன் அவர்களால்தான் என்று துணிந்து கூறலாம்.

நூலக இயலின் பல்வேறு கூறுகள் பற்றித் தனித்தனியாகப் பலர் நூல் எழுதியிருக்கின்றனர். ஆனால் எல்லாக்கூறுகளையும்பற்றி ஒருவரே நூல்கள் எழுதியிருக்கின்றாரென்றால் அது இந்த உலகிலேயே டாக்டர் ரங்கநாதன் அவர்கள்தான் என்பதையாவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. நூலக இயலில் நேற்று நடந்தது, இன்று நடப்பது பற்றி அவர் எழுதியிருப்பது போல் நாளை நடக்கவிருப்பதையும் முன் கூட்டியே உய்த்துணர்ந்து நூல்கள் எழுதியுள்ளார். இன்றும் அவர் தம் எண்ணத்தில் தோன்றும் புதுப்புதுக் கருத்துக்கள் அவர் நடத்தும் நூலக இயல் பற்றிய மாத இதழில் வெளிவந்து கொண்டேயிருக்கின்றன.

எழுபத்தேழு ஆண்டுகளாகிய இந்நிலையிலும் டாக்டர் ரங்கநாதன் புதியது புனையும் அறிவியல் அறிஞராக விளங்குகிறாரென்றால் அவர்தம் உள்ளம் இன்னும் இளமையாகவே, இளமைக்குரிய ஊக்கத்தோடும் துடிதுடிப்போடும் உள்ளது என்பதைத்தான் காட்டுகின்றது.

இவ்வளவு புகழும் பெருமையும் படைத்த இந்திய நூலகத்தந்தை டாக்டர் எஸ். ஆர். ரங்கநாதன் அவர்கள் பிறக்கும்போதே நூலகராகப் பிறக்கவில்லை. அவர் பிறந்த பொழுது நூலகஇயல் ஓர் இயலாகவே இந்தியாவில் தோன்றவில்லை.

(வளரும்)

சோவியத் நூல் பகுப்பு முறை

நூலகத்தில் கடைப் பிடிக்கப்படுகின்ற பகுப்பு முறை எளியது. சிக்கல்கள் அதிக மில்லாத முறையில் மார்க்ஸ்—லெனின் அறிவியற் பகுப்பு முறையினை (Marx-Lenin Scientific Classification) பின் பற்றி நூல்களை பகுத்துள்ளனர். நூலகத்தில் அலுவல் பார்க்கின்ற அலுவலர்கள் தங்களது அனுபவத்தின் பயனாக இப்பகுப்பு முறையைக் கண்டு அமுல் நடத்தினார்கள். பொது அறிவு வளர்ச்சிக்குத் துணை புரிகின்ற வகையிலும், தானே சிரம மில்லாமல் நூல்களைக் கண்டு படித்து பயன்பெறுகின்ற முறையிலும் இம் முறை அதிகமான பிரிவுகளையும் நுணுக்கங்களையும் கொண்டு குழப்பத்தில் ஆழ்த்தாமல் இருப்பது குறிப்பிடத் தக்கது. சோவியத் நூலகங்கள் பெரும்பாலானவற்றில் வழக்கில் உள்ள பகுப்புமுறை இதுதான்.

லெனின் நூல் நிலையம்

தத்யானா போஸ்த்ர மோவா
(செயலாளர், லெனின் நூல்நிலையம்)

மாஸ்கோவிலுள்ள லெனின் நூல் நிலையம் சோவியத் யூனியனின் மிகப் பெரிய நூல் நிலையமாகும்; உலகிலுள்ள மிகப் பெரிய நூல் நிலையங்களில் ஒன்றுகும். லெனின் காலமான மூன்று நாட்களுக்குப் பிறகு, இந் நூல் நிலையத்திற்கு அவரது பெயர் சூட்டப்பட்டது. சென்ற நூற்றுண்டின் அறுபதாம் ஆண்டுகளில் தொடங்கப்பட்ட இந்த நூல் நிலையம் பல ஆண்டுகள் வரை ரும்யாந்த்செவ் பொருட்காட்சி சாலையின் ஒரு பகுதியாக இருந்து வந்தது. என். பி. ரும்யாந்த்செவ் ரஷ்ய ராஜியவாதி. அவரது நூல்களையும், கையெழுத்துப் பிரதிகளையும், மனித இனப் பரப்பு, அகழ்வாராய்ச்சித் தொகுப்புக்களையும் பாதுகாத்து வைப்பதற்காக அவர் பெயரில் இந்தப் பொருட்காட்சிசாலையும் நூலகமும் ஏற்பாடு செய்யப்பட்டன.

ஆரம்பத்தில், 20 பேர் அமரக்கூடிய ஒரேவொரு வாசிப்புக் கூடம்தான் இந்த நூல் நிலையத்தில் இருந்தது சில பத்தாண்டுகள் கழிந்த பிறகும் நான்கு நூலக ஊழியர்கள்தான் இங்கு பணியாற்றி வந்தனர். எனினும் அப்போதே ஒரு லட்சம் நூல்கள் வரை இந்நூல் நிலையம் பெற்றிருந்தது. பல முற்போக்கு ரஷ்ய அறிவுத்துறையினர் அடிக்கடி இங்கு வருவது உண்டு. இவர்களில் லெனினும் ஒருவர். நூலக வருகையாளர் நோட்டுப் புத்தகத்தில் வரிசை எண் 236க்கு அடுத்தபடியாக, 1893 ஆகஸ்டு 26 தேதியிட்டு லெனின் கையொப்பமிட்டிருப்பதைக் காண்கிறோம். அச்சமயம் அவர் சமாராவிலிருந்து பீட்டர்ஸ்பர்குக்குச் செல்லும் வழியில் மாஸ்கோவுக்கு வந்திருந்தார். அந்நாட்களில் ரும்யாந்த்செவ் பொது நூல் நிலையம் என்று பெயர் பெற்றிருந்த இந் நூல் நிலையத்துக்கு லெனின் மீண்டும் 1897 பிப்ரவரி 19—21 தேதிகளில் வந்திருந்தார்.

புரட்சிக்கு முந்திய காலத்தில் இந் நூல் நிலையத்தைப் பயன்படுத்திக் கொண்டவர்களில் டால்ஸ்டாய், தொஸ்தயேவ்ஸ்கி, செகாவ், மெந்தலயேவ், திமீர்யாசெவ், திசியோல் கோவ்ஸ்கி,

கொரலெங்கோ போன்ற புகழ் பெற்ற எழுத்துலக மேதைகளும் விஞ்ஞானிகளும் முக்கியமானவர்களாவர்.

இன்று மாஸ்கோவில் பெரியவையும் நடுத்தரமானவையும் சிறியவையுமாக 4.000 பொது நூல் நிலையங்கள் உள்ளன: இதன்றி, பலர் தமது வீடுகளில் சொந்த நூல் நிலையங்களையும் வைத்துள்ளனர். எனினும் அரிதினும் அரிதான தொகுதிகள் உட்பட ஏராளமான புத்தகங்களைப் பெற்றுள்ள லெனின் நூல் நிலையம் கணக்கற்றோரிடையே அதிலும் முக்கியமாக ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டிருப்போரிடையே மிகவும் பிரபலமடைந்துள்ளது.

1550 முதல் 1917 வரை பிரசுரிக்கப்பட்ட 5,50,000 நூல்களிலும், அக்டோபர்புரட்சிக்குப் பிறகு பிரசுரிக்கப்பட்ட 20 இலட்சம் நூல்களிலும் எது வேண்டுமானாலும் இங்கு வாசகருக்குக் கிடைக்கும். இதே போல், அச்சுக்கலை தோன்றியது முதல் கடந்த 500 ஆண்டுகளில் வெளி நாடுகளில் பிரசுரிக்கப்பட்ட பல நூல்களும் இங்கு கிடைக்கும்.

நூல் நிலையத்தில் பத்திரிகைகளுக்கென்று தனிக் கூடம் இருக்கிறது. இங்கு சோவியத் செய்திப் பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் (இவை சோவியத் யூனியனில் 7,300 இருக்கின்றன), அயல்நாட்டு செய்திப் பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் படிக்கலாம். வெளி நாடுகளில் பிரசுரமாகும் 16,000 சஞ்சிகைகளும், சுமார் 1,000 செய்திப் பத்திரிகைகளும் வருடந்தோறும் இங்கு வருகின்றன.

தினசரி சுமார் 10,000 பேர் லெனின் நூல் நிலையத்துக்கு வருகின்றனர். இவர்களில் பெரும்பாலோர் மாஸ்கோ வாசிகள். எனினும் இதர சோவியத்நகர்களையும் கிராமங்களையும் உலகின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த மக்களையும் இங்கு வருவோரிடையே காணலாம். 1968ல் 110 நாடுகளைச் சேர்ந்த 4,000க்கு மேற்பட்ட அயல் நாட்டுப் பிரஜைகள்



நாள்தோறும் சராசரியாக நூல் நிலையத்துக்கு வரும் 10,000 பேரில் ஒருவர்





லெனின் நூல் நிலையத்தின் சேவையைப் பயன்படுத்திக் கொண்டனர்.

மாறுபட்ட சேவை

வாசகர்களின் வசதியைக் கருதி வாசிப்புக் கூடங்கள் மாறுபட்ட கோட்பாடுகளின் அடிப்படையில் செயல் பட்டு வருகின்றன. விஞ்ஞானப் பேரவை உறுப்பினர்களுக்கும் உயர்ந்த பட்டம் பெற்ற ஆராய்ச்சி விஞ்ஞானிகளுக்கும் ஒரு தனிக் கூடம் ஒதுக்கப்பட்டுள்ளது. பல்கலைக் கழகப் படிப்போ, கல்லூரிப் படிப்போ கற்றவர்களுக்கென்று பல கூடங்கள் உள்ளன. அந்தந்தத் துறைகளை அனுசரித்து இவை பலபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவையன்றி, 500 பேர் அமரக் கூடிய ஒரு பொது வாசிப்பு மண்டபம் இருக்கிறது. கல்லூரிப் பட்டம் பெற்றவர்கள் அதிலும் முக்கியமாக மாணவர்களே இங்கு பெரும்பாலும் வருகின்றனர். செய்திப் பத்திரிகைகள், சஞ்சிகைகள், மைக்ரோ பிலிம்கள், கையெழுத்துப் பிரதிகள், அரிய நூல்கள், இசைத் தொகுப்புக்கள் போன்றவற்றுக்குத் தனித் தனி அறைகள் இருக்கின்றன. மொத்தத்தில் 2,500 பேர் அமரக்கூடிய 22 வாசிப்புக் கூடங்கள் இந் நூல் நிலையத்தில் உள்ளன.

நூல் நிலையத்தில் ஆராய்ச்சிப் பகுதியில் ஒருவர்

1968ல் நூல் நிலையத்துக்கு 25இலட்சம் பேர் வந்தனர்; ஓராண்டுக் காலத்தில் வாசகர்களுக்கு 1 கோடி 30 இலட்சம் நூல்கள் வழங்கப் பட்டன.

இதர நகர்களிலுள்ள வாசகர்களுக்கென்று லெனின் நூல் நிலையம் ஒரு தனி சர்வீஸ் நடத்துகிறது. தாற்காலிகமாகப் பயன்படுத்திக் கொள்வதற்காக 5,000 சோவியத் நூல் நிலையங்களுக்கும் 500 அயல் நாட்டு நூல் நிலையங்களுக்கும் சுமார் 5 இலட்சம் நூல்கள் அனுப்பப் படுகின்றன. இதன்



லெனின் நூல் நிலையம் முழுத்தோற்றம்

மூலம் 1,200க்கு மேற்பட்ட சோவியத் நகர்களும் கிராமங்களும் லெனின் நூல் நிலையத்திலிருந்து புத்தகங்களை இரவல் வாங்குவதுசாத்தியமாகியுள்ளது.

நூல் நிலையத்தில் சோவியத் யூனியனின் 89 மொழிகளிலும் 109 அயல் மொழிகளிலும் 2 கோடி 50 இலட்சம் புத்தகங்களும் பிரசுரங்களும் சஞ்சிகைத் தொகுப்புகளும் செய்திப் பத்திரிகைத் தொகுப்புகளும் இருக்கின்றன. இவற்றுடன் வருடந்தோறும் கிட்டத்தட்ட 10 இலட்சம் புத்தகங்களும் சஞ்சிகைகளும் சேகரிக்கப்படுகின்றன. இதற்காக ஒவ்வோர் ஆண்டும் 14 கிலோமீட்டர் அலமாரி இடம் தேவைப்படுகிறது. நூல் நிலையத்திலுள்ள அலமாரிகளின் மொத்த நீளம் 450 கிலோமீட்டருக்கும் அதிகம்.

நூல் நிலையத்தைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வரும்போது அரிய நூல்கள் அடங்கிய பகுதி நம்மைக் கவர்கிறது. பல ரஷ்ய இலக்கியங்களின், உலக இலக்கியங்களின் மூலப் பதிப்புக்களும் கலை, விஞ்ஞானம் சம்பந்தப்பட்ட நூல்களும் இங்குஉள்ளன. லெனினது நூல்களும் இப் பகுதியில் விரிவாக இடம் பெற்றுள்ளன. கையெழுத்துப் பிரதிகள் அடங்கிய பகுதியில் பதினோராம் நூற்றாண்டு முதல் சேகரிக்கப்பட்ட சுவடிகள் காணப்படுகின்றன.

புத்தகங்களைப் பிரபலப்படுத்துவதற்காக வருடந்தோறும் 700க்கு மேற்பட்ட புத்தகக் கண்காட்சிகளை லெனின் நூல் நிலையம் நடத்துகிறது. விஞ்ஞானம், தொழில் நுட்பம் சம்பந்தப்பட்ட முக்கிய பிரச்சினைகளை யொட்டியும், ஆண்டு விழாக்களை யொட்டியும் இந்தக் கண்காட்சிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

புத்தக விபரத்

தொகுப்புப் பணி

லெனின் நூல் நிலையத்தைச் சேர்ந்த தகவல் பிரிவு ஊழியர்

லெனின் நூல் - நிலையத்தின் 22 வாசிப்புக் கூடங்களில் ஒன்று. இங்கு 500 பேர் அமரலாம். (24-25 பக்கம்)

கள் தொலைபேசி வாயிலாகவும், தபால் வாயிலாகவும், டெலக்ஸ் வாயிலாகவும் ஆண்டு தோறும் வரும் சுமார் 1,40,000 கேள்விகளுக்குப் பதிலளிக்கின்றனர். நூல் நிலையம் அவ்வப்போது விஞ்ஞானத் தகவல்களைப் பிரசுரிக்கிறது; புத்தக விவரத்தொகுப்புகளைச் சிபாரிசு செய்கிறது புத்தக விபரத் தொகுப்பு சர்வே நடத்த ஏற்பாடு செய்கிறது! தனதுவாசகர்களுக்காகப் புத்தக விவரத் தொகுப்புக் கருத்தரங்குகளை நடத்துகிறது.

இதல்லாமல் லெனின் நூல் நிலையம் கூட்டும் வாசகர் மாநாடுகள், எழுத்தாளர்களுடனும் ஆசிரியர்களுடனும் ஏற்பாடு செய்யும் சந்திப்புக்கள் போன்றவை வாசகர்களிடையே பெரிதும் பிரபலமடைந்துள்ளன; பரந்த வாசகர் வட்டாரங்களில் மிகுந்த ஆர்வத்தைக் கிளர்த்தி விட்டுள்ளன.

அயல்நாடுகளிலிருந்து மாஸ்கோ பல்கலைக் கழகத்தில் பயிலும் ஆராய்ச்சியாளர்கள் நூல் நிலையத்தில நடைமுறைப் பயிற்சி பெறுகின்றனர்.

நூல் நிலையத்தின் இசைப் பிரிவு தான் சேகரித்து வைத்துள்ள பழைய இசைத் தட்டுக்களின் மூலம் இசைப் பிரியர்களுக்காகச் சனிக்கிழமைதோறும் அரிய இசை விருந்தளிக்கிறது.

லெனின் நூல் நிலையம் நூல் நிலையப் புத்தக விவரத் தொகுப்பியலிலும் விஞ்ஞானத்திலும் சோவியத் யூனியனிலேயே மிகப் பெரிய ஆராய்ச்சிக் கேந்திரமாகி விட்டது. புத்தக விவரத் தொகுப்பு முறைகள் குறித்தும் நூல் நிலைய முறைகள் குறித்தும் பெரிய பதிப்புக்களாக லெனின் நூல் நிலையம் வெளியிடும் குறிப்பேடுகள் நாடெங்கிலுமுள்ள நூலகங்கள் தமது பணியை ஒழுங்கமைத்துக் கொள்வதற்குப் பெரிதும் துணைபுரிகின்றன. ○

ஊதிய உயர்வு!

குளச்சல் தங்கவேல். B. Sc., B. L. Sc

"எப்பொருள் யார்யார் வாய்க்
கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு"

—என்று கூறுகிருர் திருவள்ளுவர். மெய்ப்பொருளுக்கும் கல்லூரி நூலகர்களின் ஊதிய உயர்விற்கும் என்ன சம்பந்தம்? அதிகப்படியாகப் பொருள் கேட்கின்ரேம்—ஊதிய உயர்வு கேட்கின்ரேம்! அதை எவ்வழியில் கேட்கின்ரேம்? மெய்யான வழியில்; உண்மைக் காரணங்களே அடுக்கடுக்காக எடுத்துக்கூறி அறிவாற்றலின் வாயிலாக ஆய்ந்து தகுதியுடையதா என்று சீர்தூக்கிப் பார்த்து அடிப்படை ஊதியத்தை உயர்த்து என்கிரேம்.

உதவிப் பேராசிரியர்களின் ஊதிய விகிதம் ரூபாய் 225–10–275–15–425 என்கிற விகிதத்தில் இருக்கின்ற நேரத்தில் பல்கலேக்கழக மான்யக் குழு (University Grants Commission) நூலகர்களுக்கும் அத்தகைய ஒரு சம நிலே நோக்கை ஊதிய முறையில் அளிக்கவேண்டும் என்று கூறிற்று. அக்கூற்றைக் கல்வியமைச்சரும், கல்வி அதிகாரிகளும் ஆமோதித்து ரூபாய் 225–10–275–15–425 என்கிற விகிதத்தில் ஊதியத் தொகை வழங்கப்பட்டதாகத் தெரிகிறது. மெய்ப்பொருளும் அதுவே. இது அன்று.

ஆனல் இன்று, புதிதாக ஒரு மான்னியக் குழு (U. G. C.) அமைக்கப்பட்டதாகவும் அதற்கிணங்க தமிழக அரசு ஊதிய விகிதத்தை மாற்றியமைத்ததாகவும் கூறுகிருர்கள்.

ரூபாய் 225-10-275-15-425-லிருந்து 140-5-180-10-250 என்ற நிலேக்கு ஊதிய விகிதம் குறைக்கப்பட்டது; ஆனல் சில திங்களுக்குப் பின் அங்கேயும் மெய்ப்பொருள் விளக்கப்பட்டு

புதுமை ஒன்று நிகழ்ந்தது. அப் புதுமை ரூபாய் 140-5-180-10-250-லிருந்து ரூபாய் 200-10-300 என்ற விகிதத்திற்கு ஊதியத்தை உயர்த்தியது. இங்கே தான் பழைய நூலகர்களுக்கும் புதிய நூலகர்களுக்குமிடையிலே ஒரு வேறுபாடு. அந்த வேறுபாடு நூலகர்களுக்கும் கல்லூரி முதல்வர்களுக்குமிடையே சிறு பூசலையும் புகைச்சலையும் ஏற்படுத்துகிறது. ஏன்? எப்படி? என்று கேட்கத்தோன்றும்! புதிய நூலகர்கள் பழைய நூலகர்களின் ஊதிய விகிதமாகிய ரூபாய் 225-10-275-15-425-ஐக் கேட்க, கல்லூரி முதல்வர்கள், "இல்லை, புதிய U. G. C. ரூபாய் 200-10-300 ஐத்தான் கொடுக்கக் கூறுகிறது என்று அடம் பிடிக்க, இருவருக்குமிடையிலே சிறு புகைச்சல் ஏற்பட்டு நூலகத்தின் வளர்ச்சியைப் பாதிக்கிறது.

B.A\B.Sc பட்டப் படிப்பை முடித்து விட்டு கல்லூரியைவிட்டு வெளியேறியவர்கள் Tutor\ Demonstrators என்கின்ற பதவியில் சேர்க்கப்பட்டு ரூபாய் 200-10-300 என்ற அடிப்படை விகித முறையிலே ஊதியம் பெறுகின்றனர். ஆனல் நூலகர்கள் BA/BSc என்கிற பட்டப் படிப்பை முடித்துவிட்டு, மேலும் B.L.Sc என்கின்ற பட்டத்தையும் ஓர் ஆண்டுக்காலமும் மூன்று திங்களும் படித்து முடித்து பதவியில் அமர, இரு பிரிவினருக்கும் ஒரே அடிப்படை முறையில் ஊதிய விகிதம் வகுக்கப்பட்டிருக்கிறது என்றால் மிகமிக வருத்தத்திற் குரியது.

பல்கலைக் கழக மான்யக் குழு (U.G.C.) முதன் முதலில் ரூபாய் 225-10-275-15-425 என்கின்ற விகிதத்தில் உதவிப் பேராசிரியர்களுக்குச் சமமாக கல்லூரி நூலகர்களுக்கும் கொடுக்கக் கூறிய தையும், அதை அமல் நடத்தி கொடுக்கப்பட்டதையும் நினைவில் நிறுத்தி, இப்பொழுதும் உதவிப் பேராசிரியர்களுக்குக் (Assistant professors \ Lecturers) கொடுக்கப்படும் ரூபாய் 300-25-600 என்கின்ற ஊதிய விகித முறையை கல்லூரி நூலகர்களுக்கும் கொடுக்கவேண்டுமென்பதே நாங்கள் கேட்கும் ஊதிய உயர்வு.

ரூபாய் 300-25-600 என்கின்ற அடிப்படை ஊதியம் உதவிப் பேராசிரியர்களுக்குக் கொடுக்கப் படுகிறது. அத்தகைய ஆசிரியர்களின் பதவிப் பாதையிலே எத்தனை எத்தனை முன்னேற்றப் பாதைகள் இருக்கின்றன என்பதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். உதவிப் பேராசிரியர் (300-25-600): பேராசிரியர் (400-30-640-40-800); கல்லூரி முதல்வர் (700-40-1100); உயர் பட்டப்படிப்பு கல்லூரி முதல்வர் (Principal - post graduate college) (800-50-1250)-இத்தகைய பதவி உயர்வுகள் உதவிப் பேராசிரியர்களை (Assistant professors\Lecturers) வருக, வருக என அழைத்துக் காத்துக் கொண்டிருக்கிறது.

உதவிப் பேராசிரியர் கல்லூரி முதல்வராக (Principal) அல்லது சந்தர்ப்பமும் சூழ்நிலைகளும் சாதகமாக அமைந்தால் கல்வி அதிகாரியுமாகி (Director of Education) பதவியை விட்டு விலகி (Retire) ஓய்வு பெறுகிறார். அதே நேரத்தில் நூலகர் நூலகராகவே (200-10-300) வாழ்க்கைப் பாதை சோர்ந்து போய், தலைவிதி, போயும் போயும் இந்தப் படிப்பைப் படித்து நூலகர் வேலைக்கு வந்தோமே என்று தம்மைத்தாமே நொந்து கொண்டு பதவியை விட்டு வெளியேறு

கிறார். 25-வயதில் ஒருவர்கல்லூரி யிலே நூலகராகப்பதவியேற்கிறார் என்று வைத்துக் கொண்டால், தம்முடைய 35 வயதில் பத்து ஆண்டுகளைக் கடந்து பதவியின் உயர்ந்த (maximum) அடிப்படை ஊதியமாகிய ரூபாய் 300ஐ அடைந்து விடுகிறார். 35 வயதி லிருந்து 58 வயது வரை (Retirement), இடைப்பட்ட 23 ஆண்டு காலம் 35ம் வயதில் பெற்ற உயர்ந்தபட்ச அடிப்படை ஊதிய மாகிய ரூபாய் 300-ஐயே பெற வேண்டியிருக்கிறது.

துணை ஆசிரியர் (Tutor/Demonstrator) உதவிப் பேராசிரியர் (Assistant professor/Lecturer), பேராசிரியர் (professor), கல் லூரி முதல்வர் (Principal) உடற் பயிற்சி ஆசிரியர் (Physical Director) என்கிற பிரிவுகளைச் சார்ந்த ஆசிரியர்கள் எல்லோரும் ஆண்டு இறுதியில் நடத்தப்படு கின்ற தேர்வுக்கு(Annual Examination) மேற்பார்வையாளர் களாக (Invigilatos) அமைக்கப் பட்டு, அதற்கான ஊதியத்தை யும் பெறுகின்றனர். ஆனால் அத் தகையமேற்பார்வை வேலையிலே —ஊதியம் வருகின்ற வேலையிலே —நூலகர்கள் அதிகமும் சேர்க்கப் படுவதே இல்லை. இவ்வகையிலும் கல்லூரி நூலகர்களுடைய ஊதி யம் ஏனையோரைவிட குறை கிறது.

உதவிப் பேராசிரியர்கள், பேராசிரியர்கள் போன்றவர் களுக்கு தேர்வு விடைத்தாள் மதிப்பிடுவதில் கூட (Valuation of public Examination answer papers) வருவாய் வருகிறது. நூல கர்களுக்கு அதுபோன்ற சந்தர்ப் பம் எதுவுமில்லை. அவர்களீ அதைப் பற்றிக் கவலைப்படவு மில்லை.

விடுமுறை நாட்களில்கூட நூல கர்கள் கல்லூரியிலேயே இருக்க வேண்டுமென்று கல்லூரி முதல் வர்களால் கட்டாயப்படுத்தப் படுகிறார்கள். இவ்வகையில் ஏனைய ஆசிரியர்களைவிட நூலகர் களுடைய சேமிப்புத் தொகை குறைகிறது.

இது வரையிலும் சக ஊழியர் களைப்போல் வருவாய் முறையில் சமத்துவம் இல்லை என்பதையே குறிப்பிட்டேன். இனி, வருகின்ற வருவாயாகிய ரூபாய் 200-10-300-ரிலும் கொஞ்சம் இழக்க வேண்டி வருகிறது என்பதையும் எடுத்துக் காட்டுகிறேன். எப்படி? ஏன்? என்பீர்கள். அதுதான் 'நூல் இழப்பும்' (loss of book) அதற்காக நூலகர்கள் அதன் விலையை கட்டுதலும். ஊதிய உயர்வு கேட்கின்ற இந்த நேரத் தில் கொடுக்கப்படும் ஊதியத்தி லும் ஒரு சிறுதொகை போகிறது என்றால் நூலகர்களின் இதயம் எவ்வளவு வேதனையடையும் என் பதைச் சம்பந்தப்பட்டவர்கள் சிந்திக்க வேண்டும்.

''சிந்திக்கவேண்டும், சிந்திக்க வேண்டும்'' — என்று மேலே பல இடங்களில் சிந்திக்க, சிந்தித்து செயல்பட விட்டுள்ளேன். யார் வாய்ச் சொல்லாக இருப்பினும் அதைச் சிந்தித்து சீர்தூக்கிப் பார்த்து, மெய்ப் பொருளாகிய உண்மையுடைத்தா என்பதை அறிவாற்றலால் உய்த்துணர்ந்து கல்லூரி நூலகர்களின் ஊதி யத்தை ரூபாய் 300-25-600 என்கின்ற அடிப்படையில் உயர்த்தி கல்லூரி நூலகர்களின் கௌரவத்தைக் காப்பதே நன்று.

ஆசிரியர் நூலகம் சென்னை-17.

பொது நூலகங்களும் புத்தக இழப்பும்

அன்புள்ள ஆசிரியருக்கு,

கடவுற் சிலையாயிருந்தாலும் அது கற்சிலையாய் இருந்தாலும் களவாடிச் சென்று கப்பல் வாணிபம் செய்யக் கற்றுக் கொண்டிருக்கும் இந்நாட்டில் காகிதத்தாலான புத்தகங்களைக் கவர்ந்து செல்லுதல் வியப்பாகாது. வேலையில் விழிப்பற்ற தன்மை என்ற பழியுமாகாது. நாட்டில் ஒழுக்க நெறி குறைந்துவிட்டது என்பதற்கு அன்றாடச் செய்தித்தாள்களே அத்தாட்சி. பெருந்தொகையுடன் ஒரு அதிகாரி தலைமறைவாகி விட்டார், பாங்கில் பணம் பெற்றுவரச் சென்றவரைக் காணவில்லை, பாதுகாப்புடன் வைக்கப்பட்டிருந்த தஸ்தாவேஜிகளைக் காணவில்லை என்ற செய்திகள் நாளிதழில் இடம் பெறத் தவறுவதில்லை. குபேரபுரி அமெரிக்காவிலும், சோஷலிச நாடான ருஷ்யாவிலும் கயவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

பொதுமக்கள் நலனுக்காக நடத்தப்படும் போக்குவரத்துத் துறையிலும், மருத்துவத் துறையிலும், கூட்டுறவுத் துறையிலும் மற்றும் பல அரசினர் தொழிற்சாலைகளிலும் ஏற்படும் இழப்பை எல்லாம் ஏற்றுக்கொள்ளும் மனம் படைத்த நமக்கு நூலகத்தில் ஏற்படும் இழப்பை மட்டும் ஏற்றுக் கொள்ள மனம் இல்லை. ஈடுகட்ட வேண்டும் என்று நூலகரை நிர்ப்பந்திக்கிறோம். நுழைபவர்கள் எல்லாரையும் நல்லவர்களாக மாற்றக்கூடிய சொர்க்க வாயில் அல்ல நூலகத்தின் வாயில்.

பொது மக்களுக்கு இலவசச் சேவை செய்யவே பொது நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நூலகத்தில் காணாமற் போகும் புத்தகங்கள் நூலகத்தின் நான்கு சுவர்களுக்கு இடையில் பயன்படுத்தப்பட வில்லையானாலும் கைமாறி, இடம்மாறி யாருக்கோ பயன்படுகிறது. வெடித்து வேரிடத்தே விழுந்து முளைக்காது போனாலும், பறந்து சென்றுவேறு எங்கோ முளைக்கும் ஊமத்தம் விதையைப்போல் நூலக இழப்பு இருக்கிறது. கொளுத்தி குளிர் காய யாரும் நூலகப் புத்தகங்களைக் கவர்ந்து செல்லுவதில்லை. படித்துப் பயன் பெறத்தான் களவாடிச் செல்லுகின்றனர் ''இருப்பில் குறைந்துவிட்டது, பொறுப்பில் உள்ளவர் நூலகர், பிடி அவருடைய ஊதியத்தை ''என்று பிடித்து விடாமல், கள்வனின் கைக்குச் சென்றாலும் தன் கடமையை செய்கிறது நூலகப் புத்தகங்கள் என்ற முழுமன நிறைவுடன் நூலக இழப்பைத் தள்ளி விடுவதுதான் நியாயமாகும்.

இழப்புக்குப் பயந்து நூலகத்தைப் பலத்த காவல் கட்டுப்பாடுகளோடோ அல்லது பூட்டி வைத்தோ காத்து வந்தால் நூலகப் பயனைக் காணமுடியாது.

— செல்விப்பிரியன்

கையெழுத்துச் சுவடிகளின் கருவூலம்

"சோவியத் நாடு"

மாஸ்கோவிலுள்ள சோவெத்ஸ்காயா சதுக்கத்தில் மார்க்சிய-லெனினிய நிறுவனம் உள்ளது; இந்த ஆராய்ச்சி நிறுவனத்தில் மார்க்ஸ், லெனின் ஆகியோரது நூல்கள் ஆராயப்படுகின்றன; அவர்களது வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜிகளும் இங்கு பத்திரப்படுத்தி வைக்கப்பட்டுள்ளன.

லெனினது கையெழுத்துச் சுவடிகள் பல்வேறு வழிகளிலும் பல்வேறு நிலைமைகளிலும் இங்கு வந்து சேர்கின்றன. அவற்றில் சில சிதல் சிதலாக உள்ளன. அவற்றின் யதாஸ்திதிக்கு அவற்றை மீட்டுக் கொணர்வதற்கு, மாதக்கணக்கில், சமயங்களில் வருடக் கணக்கில் அரும்பாடுபட்டு ஆராய வேண்டியுள்ளது.

இதோ ஓர் உதாரணம்: பக்க ஓரங்களில் லெனின் எழுதி வைத்திருந்த குறிப்புக்களோடு கூடிய விளதீமிர் குபெர்னியாவின் கைவினைத்தொழில்கள் என்ற நூல் சுவடிக் கருவூலத்துக்கு வந்து சேர்வதற்கு முன்னால், அது ஏராளமான கைகளைக் கடந்துவிட்டிருந்தது. அந்நூல் தண்ணீரில் நனைந்துபோயிருந்தது; அதன் தையல் விட்டுப் போயிருந்தது; பக்கங்கள் கறுப்பும் சிவப்புமான கறைகளும் பூஞ்சையும் கூடப் படிந்து மக்கி இற்றுப் போயிருந்தன. லெனின் குறித்து வைத்திருந்த வாசகங்கள் பெரிதும் பாதிக்கப் பட்டிருந்தன. வெறுங் கண்ணோடு பார்த்தால், அதில் நீலப்பென்சிலால் எழுதியமங்கிய கோடுகளை மட்டுமே காண முடிந்தது. அவற்றை இனம் கண்டு கொள்வது ஆராய்ச்சியாளர்களுக்குப் பெரும்பாடாக இருந்தது. இருப்பினும், அவற்றை யதாஸ்திதிக்கு மீட்டுக் கொணர்ந்த பின்னர் அந்நூலின் பக்கங்களில் பூஞ்சை படிந்த அடையாளமே இருக்கவில்லை; லெனினது குறிப்புக்கள் நேற்றுத்

தான் எழுதிவைத்தவை போன்று அத்தனை தெளிவாக இருந்தன.

சுவடிகள் பெரும்பாலும் சிதிலமடைந்த நிலையில்தான் சுவடிக் கருவூலத்துக்குவந்துசேர்கின்றன. அவை தொட்டாலே உதிர்ந்து விடும் நிலையிலேயே இருந்தன. இத்தகைய தஸ்தாவேஜிகளைப் ''பாடம் பண்ணுவதில்'' மூதல் நடவடிக்கை அவற்றின் ஒரு புறத்தில் மெல்லிய கண்ணுடித் தாளை ஒட்டுவதாகும். இந் நடவடிக்கைக்குதேர்ந்த ஞானமும் நம்பற்கரிய திட்பமும் தேவை. இவ்வாறு செய்து விட்டால், தஸ்தாவேஜி பொடிந்து உதிராது. பின்னர் மறுபக்கத்திலும் ஒரு பிரத்தியேகக் காகிதம் ஒட்டப்படுகிறது. இவ்வாறு அந்தத் தஸ்தாவேஜி ''குணப்படுத்தப் படுகிறது''; பாதுகாக்கப் படுகிறது; ''புத்துயிர் ஊட்டப்படுகிறது.''

லெனினது தஸ்தாவேஜிகள் வழக்கமாக அதன்மூலச்சுவடியை மீட்டுக் கொணர்ந்த நிலையிலே பாதுகாக்கப் படுகின்றன. அவற்றை ஆராய்ந்து வரும் ஆராய்ச்சியாளர்கள் அவற்றின் புகைப்படப் பிரதிகளையோ, மைக்ரோ பிலிம் பிரதிகளையோ தான் பயன்படுத்திக் கொள்கின்றனர். இந்த விதி சுவடிக் கருவூலத்தில் பணியாற்றும் ஆராய்ச்சி ஊழியர்களுக்கும், அதேபோல் வாசக சாலையில் பணியாற்று பவர்களுக்கும் பொருந்தும். மூலச் சுவடிஎழுதப்பட்டுள்ள அதே காகித வகையை நீங்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டால் மூலச்சுவடி எது, பிரதி எது என்று நிபுணர்கள் மட்டுமே கண்டறிந்து சொல்லக் கூடிய விதத்தில் உங்களுக்கு விரைவில் ஒரு பிரதி கிடைத்து விடும். இந்த முறையின் விளைவாய், லெனின்

புள்ளி விவரங்கள்

1919க்கும் 1965க்குமிடையே சோவியத் யூனியனில் மொத்தம் 20 இலட்சம் புத்தகங்கள் 3,000 கோடிப் பிரதிகள் வெளியிடப் பட்டன.

காட்சிப் பொருட் கூடங்களில் லெனினது எழுத்துக்களின் அச்சு, அசலான பிரதிகளைக் காட்சிக்கு வைப்பது சாத்தியமாயிற்று.

மூலச்சுவடிகள் யாருக்கும் கிட்டுவதில்லை - அவை பிரத்தியேகக் கருவூலங்களில் வைக்கப் பட்டுள்ளன. பழுது படாது பார்த்துக் கொள்ளும் காரியங்களுக்காக மட்டும், ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை மட்டும் அவை பரிசீலிக்கப் படுகின்றன.

கருவூலத்துக்குள் கொஞ்சங் கூட மாற்றமில்லாது ஒரு குறிப்பிட்ட சீதோஷ்ணமும் ஈரப்பதமும் கொண்ட காற்றைப் பிரத்தியேகக் குளிர் சாதனக் கருவிகள் செலுத்தி வருகின்றன. கருவூலத்தின் முகட்டில், அல்ட்ரா வயலட் கதிர்களை ஈர்த்துக் கொள்ளும் பிரத்தியேக விளக்கு அமைப்புக்கள் உள்ளன. அங்கு யாரேனும் வேலை பார்க்கும் சமயத்தில் மட்டுமே இந்த விளக்குகள் ஏற்றப்படுகின்றன. தஸ்தாவேஜிகளின் ''ஆரோக்கியத்தை''ச் சோதித்து பார்ப்பதற்கோ அல்லது புதிதாகக் கண்டெடுக்கப்பட்ட லெனினது கையெழுத்துச் சுவடியை அங்கு பத்திரப்படுத்தி வைப்பதற்கோ மட்டுமே, பொதுவாக நிறுவனத்தின் ஆராய்ச்சி ஊழியர்கள் கருவூலத்துக்குள் செல்கின்றனர்.

அறிமுகம்

"வாழ்க நீ எம்மான்!"

ஆசிரியர்: கவிஞர் சேதுராமன்

பல நூற்றுண்டுகளுக்குப் பிறகு பாரத நாட்டில் இமயம் முதல் குமரி வரை, அனைத்துக் கவிஞர்களாலும், பாடிப் புகழப் பெறும் தலைமகனாகத் திகழும் அண்ணல் மகாத்மாவின் நூற்றுண்டு விழா நினைவாக, கவிஞர் சேதுராமன் அவர்கள் "வாழ்க நீ எம்மான்" என்ற பன்மொழிக் கவிதைத் தொகுப்பை வெளியிட்டுள்ளார்.

அன்று பாரதி கூறிச் சென்ற 'கலைச் செல்வங்கள்' கொணரும் பணியில், இம்முயற்சி ஒரு மைல் கல் எனலாம். பிறமொழிக் கவிதைகளைத் தமிழாக்கம் செய்யும் போது என்னென்ன விதிகள் பின்பற்றப்படவேண்டுமோ, அவ்வளவு விதிகளையும் பின்பற்றும் ஆற்றல் இப்போது தான் அரும்பத் தொடங்கியிருக்கிறது.

மொழியாக்கம் என்பது, ஒரு மொழியின் ஆத்மாவை, மறு மொழிக்கு அர்ப்பணிக்கும் ஒரு படைப்பாக்கச் செயலுக்கு ஒப்பானது. கவிஞர் 'வாழும் கோத்சேக்கள்' என்ற புரட்சி மிக்க கவிதை மூலம் தானும் கவித்வம் நிரம்பியவர் என்பதைக் காட்டியுள்ளார்.

"...மற்றும் பல்லோர்
கொள்ளையர்கள் மேலாகி எளிய மக்கள்
குமுறிஎரி வயிறருகில் கூதல் காய்ந்தார்"

மொத்தம் பதினுறு மொழிக் கவிதைகள் (தமிழ் உட்பட) தமிழ்வடிவம் பெற்றிருக்கின்றன. வட இந்திய மொழியாக்கக் கவிதைகளைவிட, திராவிட இன மொழிக் கவிதைகளில் கவிஞரின் மொழியாக்கம், ஆழ்ந்த உணர்ச்சியாலும், விழுமிய கற்பனை நயத்தாலும் சிறப்பாக விளங்குகின்றன.

மலையாள மகாகவி சங்கர குருப்பின் கவிதை (பாரத மதி) உணர்ச்சி முடுக்குடன் தொடங்குகிறது. (அம்புலியே நினைவுண்டா உனக்கு?) இதே கவிதையில் சிறுவனுன மோகன தாஸ் காந்தியை,

"சிறுவனவன் நீலங்கொள்
வானக் காட்டின்
தம்முகிலாம் மரக்கிளையைத்
தள்ளிச்செல்லும்
தண்மதிநின் வருகைக்காய்க்
காத்திருந்தான்',

எதைக் கவிஞன் உணர்ச்சி நெகிழ உணர்ந்து கண்டானே, அதை அவன், கவிதை மூலம் ரசிகன் பெற்று விடும் நிலையிலேயே கவிதை சிறந்த கவிதை ஆகிறது. இந்தக் காட்சி நயத்தின் மொழியாக்கம் அழகாகவும், அருமையாகவும் இருக்கிறது.

"வழிபடு மேடையில் வர
மாட்டான் கொல்!
விழிமுன் தோன்றி விதி
மாற்றுன் கொல்!"

என்று அவல உணர்வை சொல்லோவிய மாக்கிடும் தெலுங்குக் கவிதையும்,

''...வையத்தையே எரிக்கும்
நெருப்பினை உள்ளே நெகிழ
வைத்துள்ள
அருமை நலம் காட்டும் ஆருயிர்த்
தெளிவு நீ!''

என்ற கன்னட மொழியாக்கமும், அண்ணலின், தியாக வாழ்க்கையையும், அவர் அளித்த ஒப்பற்ற இரு ஆயுதங்களான உண்மை, அகிம்சை பற்றிய உயர்வையும் இப்பாடல்கள் அல்லாமல் அனைத்துப்பாடல்களும் எடுத்துக் காட்டுகின்றன.

இதையடுத்து கருத்தினை ஈர்ப்பவைகளில் 'மார்க்சும் - காந்தியும்', (மராட்டி) 'காலத்தின் தேரோட்டி' (இந்தி) 'மாதவ முனி' (வங்கம்) காந்தி (ஆங்கிலம்), என் குருநாதன் (மலையாளம்) ஆகிய கவிதைகளுள், பல இடங்கள் மொழிபெயர்ப்பாகவும், பல பகுதிகள் மொழி ஆக்கக் கவிதைகளாகவும் இருக்கின்றன.

தேவையற்ற சில தமிழ்க் கவிதைகள் தவிர்க்க இயலாமல் சேர்க்கப்பட்டனவாகத் தோன்றுதலால், இதற்கு தேசிய முக்கியத்துவம் குறையும் நிலை ஏற்பட்டுள்ளது.

மகாத்மா உயிருடன் இருக்கையில் பாடிய சில கவிதைகளும், அவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டபின் துடிதுடித்துப் பாடிய பல கவிதைகளும் உள்ளன. இவை எல்லாவற்றிலும் மகாத்மா மறைவதற்கு 27 ஆண்டுகளுக்கு முன்னால் அமரரான மகாகவியின் 'வாழ்க நீ எம்மான்' என்ற பாடல் - மற்றைய கவிதைகளின் உணர்ச்சி, கருத்து, கற்பனை வடிவம் ஆகிய எல்லாவற்றையும் தன்னகத்தே

எதை,ஏன் படிக்கவேண்டும்?

என்னால் காலத்தைக் கொல்வதற்காகப் படிப்பதை நினைத்துக் கூடப் பார்க்க முடிவதில்லை. படிக்குமுன் எதைப் படிக்க வேண்டுமென்றும்,படித்துமுடித்த பின் என்னபடித்தோம் என்பதையும் சிந்திக்காமல் இருப்பதை என்னால் கிஞ்சித்தும் எண்ணிப் பார்க்க முடியவில்லை

—சோவியத் இளைஞன்

கொண்டிருக்கிறது என்ற உண்மை இத்தொகுப்பின் மூலம் அறிய முடிகிறது.

இத்தொகுப்பு முயற்சி இந்தி மொழிக்கு அடுத்துத் தமிழில் நடந்திருப்பதும் பாராட்டத் தக்கது. மற்ற மொழிகளின் வடிவத்திலேயே இக்கவிதைகள் முழுதும் வெளியாகியிருப்பின் தமிழுக்குப் புதிய வடிவங்கள் கிடைத்திருக்கும். வடமொழிச் சொற்களுக்கு தமிழ் வடிவம் தரும்போது கவனமாக இருக்கவேண்டும். அகிம்சை, ஆத்மா, கம்சன் என்ற சொற்களுக்கு அகிஞ்சை, ஆத்துமா, கஞ்சன் என்று மாற்றினால் படிப்பதற்கும் கேட்பதற்கும் பொருத்தமாக இல்லை என்பது வெள்ளிடைமலை.

''பிறமொழிக் கவிதைகளின் நயத்தையும் வளர்ச்சியையும் ஓரளவிற்குத் தமிழர்கள் இந்தக் கவிதைகளின் மூலம் அறிய வாய்ப்புண்டு'' என்ற திரு. நாராயணனின் கருத்து இதில் விளக்கம் பெறுகிறது.

கவிஞரின் முயற்சி விழலுக்கு இறைத்த நீராகவில்லை என்று அறியும்போது திருப்தியே ஏற்படுகிறது.

சு. அரங்கராசன்

செய்திகள்

கன்னிமாராப் பொது நூலகம்

1969 அக்டோபர் மாதத்தில் கன்னிமாராப் பொது நூலகத்தில் 50 புதிய அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொண்டதன் மூலம் மொத்த அங்கத்தினர் தொகை 7483க்குஉயர்ந்துள்ளது. 10,493 வாசகர்கள் 41,686 நூற்களைப் பயன்படுத்தியுள்ளனர். 10,207 நூற்கள் வீடுகளுக்கு எடுத்துச் சென்று படிக்க அனுமதிக்கப் பட்டன.

மதுரை

மதுரை மாவட்ட மைய நூலகத்தில் 'தேசிய நூலக வார விழா' 14. 11. 1969ம் நாளன்று மாவட்ட நூலக ஆணைக்குழுச் செயலரும், மாவட்டக் கல்வி அதிகாரியுமான செல்வி என். ஞானகியவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. மாவட்ட மையநூலகர் திரு பெரியநாயகம் வந்துள்ள அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில் இவ்வார விழாவின் நோக்கத்தைப் பற்றிக் கூறியதோடு, தமிழகம், ஆந்திரம், மைசூர், மகாராஷ்டிரம் போன்று ஒவ்வொரு மாநிலத்திலும் பொது நூலகங்களுக்கான தனிச் சட்டம் இயற்றப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். பின் தலைவர் தமது முன்னுரையில் நூலகத்தின் அவசியம், நூலகரின் சேவை, வாசகர்களின் ஆர்வம், ஆகியவை பற்றி விரிவாக எடுத்துரைத்தார்கள். நூலகவளர்ச்சியைப் பொறுத்தே நாட்டின் வளர்ச்சி கருதப்படும் என்றார்கள். நூலகர்கள் பொன் மலரைப்போல் இருக்காது மணம் மிகும் மலராக வாசகர்களுக்கு விளங்க வேண்டும். நூல்களின் தரம் பற்றியும், நூல்களைக் கற்பதின் உயர்வு பற்றியும் அடிக்கடி இத்தகைய கூட்டங்களை ஏற்பாடு செய்து, பொது மக்களுடன் இணைந்து அவர்களுக்கு எடுத்துக் கூறி நூலகத்தின் பயனை கடைக்காரர்களைப் போல் கவர்ச்சியுடன் விளம்பரப் படுத்த வேண்டும் என்றார்கள்.

விழாவிற்கு மாவட்டத்தின் பல பகுதியிலிருந்து துணை நூலகர்கள் வந்திருந்தது தனிச் சிறப்புடையது. வந்திருந்த அனைவருக்கும் துணை நூலகர் திரு. பாண்டியன் நன்றி கூற, நாட்டுப் பண்ணுடன் கூட்டம் இனிது நிறைவு பெற்றது.

விழாவையொட்டி மைய நூலகத்தில் புத்தகக் கண்காட்சி ஒன்றும் ஏற்பாடு செய்யப் பட்டது.

பழயசீவரம் (செங்கை)

பழயசீவரம் கிளை நூலகத்தில் 2-10-69 வியாழக் கிழமை அண்ணல் காந்தியடிகளின் நூற்றாண்டு விழா விமரிசையாகக் கொண்டாடப் பட்டது. ஊராட்சி மன்றத்தலைவர் திரு. R. நடராஜ முதலியார் கொடி ஏற்றி வைத்துச் சொற் பொழிவாற்றினார். துணை நூலகர் திரு. க. சுந்தரேசன் இறுதியில் நன்றி கூறினார்.

மாகரல் (செங்கை)

மாகரல் கிளை நூலகத்தில் 2-10-69ல் ஊராட்சி மன்றத்

தலைவர் திரு. M. K. கன்னியப்ப முதலியார் தலைமையில் ''காந்தி நூற்றாண்டு விழா'' சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. திரு. M. K. இரகுநாதன் அவர்கள் அன்பளிப்பாகக் கொடுத்த காந்தியின் திரு உருவப் படத்தை தலைவர் திறந்து வைத்தார். பலர் சொற்பொழிவாற்றினர். துணை நூலகர் திரு. பி. பாலசுப்ரமணியம் இறுதியில் நன்றி கூறினார். ஏழைச் சிறுவர் சிறுமியருக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன.

வெள்ளியூர் (செங்கை)

வெள்ளியூர் கிளை நூலகத்தில் 2-10-69 ல் மருத்துவ அதிகாரி திரு. சீனிவாசன் தலைமையில் காந்தி நூற்றாண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஊராட்சி மன்றத்தலைவர் திரு. தனஞ்சயநாயுடு கொடி ஏற்றி வைத்தார். காந்தி உருவப்படம் ஊர்வலமாகக் கொண்டு வரப் பட்டது. ஊர்பொது மக்கள் தண்ணீர் பாத்திரமும், தம்ளரும் கிளை நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கினர். துணை நூலகர் திரு. இ. விஜயரங்கம் நன்றி கூறினார். 200க்கு மேற்பட்ட ஏழைகளுக்கும், சிறுவர்களுக்கும் உணவு வழங்கப் பட்டது.

திருத்தணி (செங்கை)

திருத்தணி கிளை நூலகத்தில் மகாத்மா காந்தி நூற்றாண்டு விழாவும், அண்ணா அவர்களின் திருவுருவப் படத் திறப்பு விழாவும் 2-10-69ல் நடைபெற்றது. திரு. சி. கதிர்வேல் முதலியார் தலைமையில் திரு. கே. வினாயகம் எம். எல். ஏ. அண்ணாவின் படத்தைத் திறந்து வைத்தார். திரு. T. புருஷோத்தம் பி. ஏ. ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு B. ஸ்ரீராமுலு நாயுடு, பேரூராட்சித்தலைவர் திரு. N. சுப்ரமணிய முதலியார், திரு N. A. ரஷீத், ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். நூலகர் நன்றி கூற, விழா முடிவில் இனிப்பு வழங்கப்பட்டது.

திருமுக்கூடல் (செங்கை)

திருமுக்கூடல் கிளை நூலகத்தில் 10-10-69 ல் உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தலைவர் திரு. ஜவஹர் தலைமையில் காந்தியண்ணல் நூற்றாண்டு விழா நடைபெற்றது. காந்தியடிகள், அறிஞர் அண்ணா ஆகியோரின் உருவப்படங்கள் திறந்து வைக்கப்பட்டன. பல அறிஞர்கள் சொற்பொழிவாற்றினர்.

கூடுவாஞ்சேரி-செங்கை

கூடுவாஞ்சேரி கிளை நூலகத்தில் 19-10-69 ல் ஊராட்சி மன்றத்தலைவர் திரு. A. குப்புசாமி நாயகர் முன்னிலையில் ''கலைமகள் விழா'' கொண்டாடப் பட்டது. பலர் வந்திருந்து விழாவைச் சிறப்பித்தனர்.

கோவிந்தவாடி (செங்கை)

கோவிந்தவாடி கிளை நூலகத்தில் 2-10-69ல் பஞ்சாயத்துத் தலைவர் பச்சையப்ப நாயக்கர் தலைமையில் காந்தி நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. திரு. கண்ணப்ப நாயக்கர் காந்தி படத்தைத் திறந்து வைத்து சொற்பொழிவாற்றினார். துணை நூலகர் திரு. S. உதயகுமார் நன்றி கூறினார்.

குத்தம்பாக்கம் (செங்கை)

குத்தம்பாக்கம் கிளை நூலகத்தில் 2-10-69ல் காந்தியடிகளின்

நூற்றுண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. திரு. பி. முனுசாமி தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். சுமார் 300 பேர்களுக்கு அன்னதானம் வழங்கப் பட்டது. 2-10-69 லிருந்து ஊர்மக்களின் ஒத்துழைப் புடன் சில தின, வார, மாதப் பருவஏடுகள் நன்கொடையாகத் தொடர்ந்து வரவழைக்கப்படு வதை வாசகர்கள் உற்சாகமாக வரவேற்றனர். துணை நூலகர் பி. ஜெயராமன் நன்றி கூறினார்.

செம்பாக்கம் (செங்கை)

செம்பாக்கம் கிளை நூலகத்தில் 2-10-69ல் மகாத்மா காந்தி நூற்றுண்டு விழா சிறப்புடன் கொண்டாடப்பட்டது. நூலக ஆலோசனைக்குழுவினால் அன்பளிப் பாக வழங்கப்பட்ட மகாத்மா காந்தி உருவப்படத்தை பஞ் சாயத்துத்தலைவர் திரு. வெ. கச்ச பாலயம் திறந்து வைத்தார். பலர் சிறப்புரையாற்றினார்கள்.

ஒரகடம் (செங்கை)

ஒரகடம் கிளை நூலகத்தில் 2-10-69ல் தேசப்பிதா காந்தி மகான் பிறந்த தின விழா ஊராட்சி மன்றத்தலைவர் திரு. வி. உடையவர் நாயுடு தலைமை யில் கொண்டாடப்பட்டது. திரு சுப்ரமணியம் தேசீயக் கொடி ஏற்றி வைத்து சொற்பொழிவாற் றினார்.

நிலக்கோட்டை (மதுரை)

நிலக் கோட்டை கிளை நூலகத் தில் காந்தியடிகள் நூற்றுண்டு விழா 2-10-69ல் நடைபெற்றது. திரு. பா. ஜீவலதா நன்கொடை யாக வழங்கிய காந்தியடிகளின் படத்தை நிலக்கோட்டை நீதி மன்ற நடுவர் திரு. பி. ராமலிங் கம் அவர்கள் திறந்து வைத்தார்; பலர் சிறப்புச் சொற்பொழிவாற் றினர். மைக்கேல் பாளையம் ஆர். சி. பள்ளிநிர்வாகத்தினர் ரூ 23 மதிப்புள்ள புத்தகங்களை நூலகத்திற்கு நன்கொடையாக வழங்கினர். "முரசொலி" "தினத்தந்தி" நாளிதழ்களை திரு வெ. மணியும், திரு. பெ. பால கிருஷ்ணராஜாவும் நன்கொடை யாக வரவழைத்துக் கொடுக்க முன் வந்தனர். துணை நூலகர் திரு. பா. வடமலைராசன் நன்றி நவின்றார்.

அருப்புக் கோட்டை (இராமனுதபுரம்)

இக்கிளை நூலகத்தில் 17-10-69ல் வாசகர் அரங்கின்சார்பில் காந்தி நூற்றுண்டுவிழா திரு. வீ. செல்வ ராஜ் அவர்கள் தலைமையில் நடை பெற்றது. பல அறிஞர்கள் சிறப் புச் சொற்பொழி வாற்றினர். துணை நூலகர் திரு. எஸ். இராமச் சந்திரன் நன்றி நவின்றார்.

திருப்பத்தூர் (இராமனுதபுரம்)

திருப்பத்தூர் கிளை நூலகத்தில் 4-10-69ல் காந்தியடிகள் நூற்றுண்டு விழா, ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. ஆறு. நாகராசன் தலைமையில் நடை பெற்றது. பஞ்சாயத்து உபதலை வர் திரு. சி. உ. சின்னக்கருப்பன் காந்தியடிகளின் படத்தைத் திறந்துவைத்தார். பலர் சொற் பொழிவாற்றினர். பள்ளி மாண வர் பேச்சுப்போட்டியில் வென் றவர்கட்கு காந்தீய நூல்கள் பரி சாக வழங்கப்பட்டன. துணை நூலகர் திரு. வெ. ரெங்கசாரி நன்றி நவின்றார்.

சங்கனூர் (கோவை)

சங்கனூர் கிளை நூலகத்தில் 2-10-69ல் காந்தி பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. நூலகத்தில் "காந்தி நூல் கண்காட்சி"யை திரு. சீனிவாசன் திறந்து வைத்தார். துணை நூலகர் திரு. V. தேவராஜ் தலைமை தாங்கி "காந்தியும், ராமராஜ்யமும்" பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

தாமல்

தாமல் கிளை நூலகத்தில் 20-10-69ல் திரு. வரதாச்சாரியார் முன்னிலையில் "கலைமகள் விழா" சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

முதுகுளத்தூர்-இராமநாதபுரம்

முதுகுளத்தூர் கிளை நூலக நண்பர் சங்கக்கூட்டம் 5-10-69ல் தலைவர் திரு. D. V. குமாரசாமி தலைமையில் நடைபெற்றது. செயலாளராக துணை நூலகர் திரு. மனோகரனும், உதவிச் செயலாளராக திரு. S. ஆறுமுகமும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். அதிக அங்கத்தினர் சேர்த்தல், பொது மக்களிடம் இலவசமாகப் புத்தகங்கள் பெறுதல், 1969க்குள் நூலக விழா நடத்துதல் ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அரக்கோணம்

சொக்கலிங்கனார் நினைவு நூலகத்தில் காந்தி நூற்றாண்டு விழா 4-10-69ல் சிறப்புடன் கொண்டாடப்பட்டது. கவியரங்கம் ஒன்று சிறப்பாக நடைபெற்றது. ஆலந்தூர் திரு. கோ. மோகனரங்கன் தலைமையில் 'காந்தீயம்' என்ற தலைப்பில் பல கவிஞர்கள் பாடினார்கள். திரு. அ. சு. பழனி நன்றி கூறினார்.

மூக்கணாங்குறிச்சி-திருச்சி

மூக்கணாங்குறிச்சி நேரு நினைவு மன்றத்தில் 25-9-69ல் வாசகர் அரங்கு ஒன்று நிறுவப்பட்டது. திரு. ப. பழனிச்சாமி தலைவராகவும், துணை நூலகர் திரு. த. நித்தியானந்தம் செயலாளராகவும், திரு. த. இரா. பழனிச்சாமி பொருளாளராகவும், ஆய்வுக்குழு உறுப்பினர்களாக திரு. ப. கந்தசாமி, பி. எஸ்ஸி. திரு. மு. பமழனிச்சாமி பி. எஸ்ஸி. திரு. பி. முத்துக்குமரன், செல்வி இராஜம், செல்வி தமயந்தி ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். முதல் கூட்டத்தில் மகரிஷியின் "ஊனக்கனவு" குறுநாவல் விமர்சனம் செய்யப்பட்டது.

நூறாண்டுகளுக்கு மேல்
புகழ்பெற்ற அச்சகம்

ஹோ அண்டு கம்பெனி
ஸ்டிரிங்கர்ஸ் தெரு, சென்னை-1

புத்தக விமரிசனம்

தமிழ் உரைநடை வளர்ச்சி

பத்தொன்பதாம் நூற்றுண்டு தமிழர் வாழ்விலும் — தமிழ் வளர்சசியிலும் இலக்கியமாகச் சொல்ல வேண்டிய ஒரு நூற்ருண்டு. இந்நூற்ருண்டில் பல மேல் நாட்டு விஷயங்களைக்கற்றுக் கொண்டோம். நமது வாழ்விற்கு ஏற்றமாதிரி அவைகளை மாற்றி யும் அமைத்துக் கொண்டோம். நம்முடைய இன்றைய வாழ்க் கைக்கு அடிப்படை போன நூற்ருண்டு; இன்றைய தமிழ் வளர்ச்சி போன நூற்ருண்டின் தொடர்ச்சியாகவே இருக்கிறது.

இந்தத் தொடர்ச்சியின் ஆரம் பத்தைச் சொல்ல பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் முயன் றிருக்கிருர். ஆனல் முயற்சி வெறும் தகவல் அளவிலேயே இருக்கிறது. இந்தப் புத்தகத்தில் ஏராளமான தகவல்கள். பல வகையானதகவல்கள். விளம்பரத் தமிழ் — அரசாங்கத் தமிழ் சயமத் தமிழ் என்று பலவிதமான தமிழ்பற்றி குறிப்புகள்உள்ளன. ரொம்பக் கஷ்டப்பட்டுக் குறிப்புக் களை திரட்டியிருக்கிருர்.

ஆறுமுக நாவலர், ராமலிங்க சுவாமிகள், வீராசாமி ரெட்டி யார், வேதநாயகம் பிள்ளை, ராஜமையர், செல்வ கேசவராய முதலியார் என்று பழைய பெயர் கள் எல்லாம்வருகின்றன. ஆனல் தலைப்புக்கு ஏற்றவாறு புத்தகம் ஒரு தொடராக எழுதப்பட வில்லை. ஆசிரியர் நோக்கம் என்ன என்பதே விளங்கவில்லை. அவர் அபிப்ராயம் என்ன என்பதும், புத்தகத்தை முடித்த பின்னும் தெரியவில்லை.

1964 — 65 இல் கல்கி நினைவுச் சொற்பொழிவாக சென்னைப் பல்கலைக் கழகத்தில் படிக்கப்பட்டதே இப்புத்தகம் என்பதை குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

புத்தகம் : 19–ஆம் நூற்ருண் டின் தமிழ் உரைநடை வளர்ச்சி ('கல்கி' நினைவுச் சொற்பொழிவு) ஆசிரியர் : அ.மு. பரமசிவானந்தம் வெளியீடு : தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், சென்னை–8. விலை : ரூ. 4. பக்கங்கள் : 216

—'கேயெஸ்'

இனிக்கும் நினைவுகள்

கல்கி பத்திரிகையில் தொடர் கதையாக வந்து பல்லாயிரம் வாசகர்களின் உள்ளத்தைத் தொட்ட நாவல் இது.

மனித உள்ளத்தின் சலனங் களையும், உணர்ச்சி மோதல் களையும் அழகாகச் சித்தரிப்பதில் நல்ல வெற்றியை அடைந்திருக் கிருர் இந்நாவலின் ஆசிரியை திருமதி கோமகள்.

நாவலின் முதற்பகுதி மிக சுவாரஸ்யமாகவும் வேகமாகவும் செல்கிறது.

கல்லூரி, பொது நூலகங்களுக்கு ஏற்ற நல்லதரமான நாவல் இது.

நூல் : இனிக்கும் நினைவுகள் ஆசிரியர் : கோமகள். வெளியீடு : பாரி புத்தகப் பண்ணை.

576, பைகிராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி சென்னை-5. ஏப்ரல், 1969. விலை : ரூ. 5-25. பக்கம் : 280.

அமெரிக்கக் காந்தி

'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து'. அத்தகைய கல்வி பயனுடையதாக அமைய வேண்டுமெனில், குழந்தைகள் உள்ளம் ஏற்குமாறு குழந்தை இலக்கியங்கள் உருவாக வேண்டும். அத்தகைய நூல்களுள் முதலிடம் பெறத்தக்கவை தமக்கென வாழாப் பிறர்க்குரியாளரின் வாழ்க்கை வரலாறுகள்.

அமெரிக்க நீக்ரோ ஒருவர் காந்தியின் அன்பு நெறியைக் கடைப்பிடித்து நின்ருர். அமைதி வழியில் அரிய சாதனைகளைச் செய்தார், அதனுல் உலகப் புகழ் பெற்ருர். நோபல் அமைதிப் பரிசும் அவருக்குக் கிடைத்தது. காந்தியைப்போல் அவரும் ஒரு கயவனின் துப்பாக்கிக்குண்டுக்கு இரையாகி மாண்டார். அவர் தாம் மார்டின் லூதர் கிங் என்ற பெரியார். அவரை ''அமெரிக்கக் காந்தி'' என்று அன்போடு அழைக்கிருேம்.

அத்தகைய அமெரிக்கக் காந்தியின் வாழ்க்கை வரலாற்றைச் சிறுவருலகம் விரும்பி ஏற்குமாறு சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் முறையில் இனிய எளிய நடையில் வினு விடையாக எழுதியுள்ளார் ஆசிரியர் திரு. மா. சண்முக சுப்பிரமணியம். படங்களும் உள்ளன.

காந்தி நூற்ருண்டு விழா நடக்கும் இத்தருணத்தில் இத்தகைய நல்ல நூலை எல்லாச்சிறுவர்களும் படிப்பது அவசியம். பள்ளி, கல்லூரி பொது நூலகங்கள் அனைத்திலும் பல பிரதிகள் வாங்கி வைக்கவேண்டிய நூல் இது. கழக வெளியீட்டின் சகல முத்திரைகளும் உண்டு இந்நூலில்.

நூல் : அமெரிக்கக் காந்தி ஆசிரியர் : மா. சண்முக சுப்பிரமணியம். வெளியீடு: கழகம், சென்னை-1. நவம்பர் 1968. பக்கம்: 96. விலை: ரூ 3-00

—இந்திரா

தமிழின் சிறப்பு

தமிழின் 16 செல்வங்களைக் கொண்ட ''தமிழின் சிறப்பு'' நூலை முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் தமிழகத்திற்கு அளித்துள்ளார்.

படிக்கத் தெரிந்த ஒவ்வொரு ஆணும் பெண்ணும் இந்நூலை படித்துப் பயன் பெறுவது அவசியம்.

பள்ளி, கல்லூரி பாட நூலாக வைக்க சகல தகுதிகளும் பெற்ற நூல் இது.

வரலாற்று புகழ் மணம் கமழும் 'தமிழின் சிறப்பு' என்ற இந்நூல் எளிய இனிய தமிழில் அமைந்துள்ளது. அனைவரும் படித்து பயனடைய வேண்டிய நூல் இது. கல்லூரி, பள்ளி, பொது நூலகங்களில் பல பிரதிகள் வாங்கி வைக்க வேண்டிய, இன்றை சூழ்நிலைக்கு அவசியம் தேவைப்படும் பச்சைத் தமிழரின் நூல் இது.

நூல்: தமிழின்சிறப்பு. ஆசிரியர்: கி. ஆ. பெ. விசுவநாதம். வி: உ, பாரிநிலையம், 59, பிராட்வே சென்னை-1. மார்ச் 1969, பக்கம்: 143. விலை ரூ 2-50

காந்தி தரிசனம்

காந்தி தரிசனத்தை அளித்துள்ள பழம் பெரும் தேசபக்தர் திரு அய்யாமுத்து அவர்களுக்கு கதர் தொண்டின் காரணமாக காந்தியடிகளுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. இத்தொடர்பினுல் தாம் அடைந்த பயனையும் பெருமிதத்தையும் இந்நூலில்சொல்லுகிருர் ஆசிரியர் அய்யாமுத்து.

காந்தி மகானின் நூறுவது பிறந்த தின ஆண்டு விழாவில் வெளி வந்துள்ள நல்ல நூல் இது.

தேசத் தொண்டு செய்ய வருபவர்கள் யோக்கியமானவர்களாக இருக்க வேண்டும். அப்போது தான் பொது நலச் சேவை உண்மையானதாக இருக்கும். ஆசிரியர் காந்தியடிகளுடன் தொடர்பு கொண்டு அறிந்த பல விஷயங்களை உண்மையாகக் கூறுகிருர். காந்தீயஇலக்கியத்தில் புதிதாகச் சேர்ந்துள்ள நல்ல நூல் இது. அனைவரும் வாங்கி ஆதரவு தருவது அவசியம். பள்ளி, கல்லூரி, பொது நூலகங்களில் காந்தீயம் பகுதிகளில் அவசியம் இடம் பெற வேண்டிய நூல் இது.

நூல்:காந்திதரிசனம். ஆசிரியர்: கோவைஅய்யாமுத்து. வெளியீடு பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1. அக்டோபர் 1969. விலை: ரூ. 3-50 பக்கம்: 202.

திருவள்ளுவர்
(நாடகம்)

படித்து மகிழத்தக்க நல்ல நாடகம் இது. நடையும் கருத்தும் நாடகத்தின அமைப்பும் அனைவரையும் மகிழ்விப்பனவாக அமைந்துள்ளன.

துன்பியல் நாடகம் இது. கதைகளில் மாற்றமும் கருத்துக்களில் புரட்சியும் கொண்டுள்ள நூல் இது. ஏலேலே சிங்கர் நல்ல உறுப்பு. பாத்திரப் படைப்பு.

இந்நாடகம் படிப்பவர்களையும் பார்ப்பவர்களையும் திருக்குறளை ஆழ்ந்து படிக்கத் தூண்டி விடக் கூடிய ஆற்றல் மிக்கதாக அமைந்துள்ளது.

கல்லூரி, பள்ளி, பொது நூலகங்களில் திருவள்ளுவர் நூல்கள் தொகுதியுடன் உடனடியாக சேர்க்க வேண்டியநல்லநூல் இது. தமிழ் மக்கள் இதனை நன்கு பயன் படுத்திப் பயனடைய வேண்டும். ஆசிரியரின் தமிழ்த் தொண்டு பெரிதும் பாராட்டுதலுக்குரியது.

நூல்: திருவள்ளுவர் (நாடகம்) ஆசிரியர்: ஆறு அழகப்பன் எம்.ஏ.எம். லிட்.வெளியீடு:பாரி நிலையம், பிராட்வே, சென்னை-1 ஜனவரி 1969. பக்கம்: 58 விலை: ரூ. 1-50

படிப்பும், பயனும்

சோவியத் மக்களது படிக்கும் ஆர்வம் எல்லையில்லாதது. வாசகர்கள் அறிவைப் பெறுவதற்காக மட்டும் படிப்பது இல்லை; பாலைவனத்தில் நீருற்றுக்களைத் தோண்டவும், நதிகளின் வளத்தை நிலப் பகுதிகளுக்குத் திருப்பவும், புதிய மாநகர்களை நிர்மாணிக்கவும், வானவெளியைத் தன் வயப்படுத்தவும் முனைகிருர்கள்.

திருவாசகம் தெளிவுரை

தமிழ் நாட்டு மிகப்பெரும் பழஞ்சமயம் சைவ சமயம். இது தமிழ்க்கடவுளாம் சிவபெருமானை முழுமுதலாகக் கொண்டுள்ளது. இது நன்னெறி.

மணிவாசகர் பாடியருளியது திருவாசகம். எட்டாந் திருமுறை திருவாசகமும் திருச்சிற்றம்பலக் கோவையாரும் ஆகும்.

ஓதும் மெய்யன்பர்கள் திருப் பாடல்களைப் பொருளுணர்ச்சி யுடன் ஓதிவரின் ஓதுவார்க்கும் கேட்பார்க்கும் பெருப்பயன் விளை விக்கும் அப்பாடல்கள்.

அழகிய கையடக்கப்பதிப்பு இது. கழகத்தின் முத்திரைகள் பொதிந்த நூல் இது. ஒரு பக்கத் தில் மூலமும், மற்றொன்றில் தெளிவான பொழிப்புரையும் அமைந்துள்ளன. பொழிப்புரை இனிமையும் தெளிவும் எளிமை யும் வாய்ந்தது. கழகப்புலவர் திரு. ப. இராமநாதப்பிள்ளை எழுதிய தெளிவுரை இது.

கல்லூரி, பள்ளி, பொது நூலகங் களில் அவசியம் இருக்க வேண்டிய சமயத் தெளிவுரை நூல் இது.

நூல்: திருவாசகம் தெளிவுரை; ஆசிரியர் : ப. இராமநாதபிள்ளை வெளியீடு: கழகம், சென்னை-1. (திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்) மே, 1969. விலை: ரூ. 3-75.

—மெய்யூரான்

வரி விளம்பரங்கள்

இப் பகுதியில் வெளியாகும் வரி விளம்பரங்களுக்கு வரி ஒன்றுக்கு ரூ 0.50 வீதம் வசூலிக் கப்படும். குறைந்த கட்டணம் ரூ. 3-00

விபரங்கட்டு
நிர்வாகி "நூலகம்"
14, தனிகாசலம் செட்டி ரோடு
சென்னை-17

வசதியாகத் தங்குவதற்கு லாட்ஜ்.

நாகர் கோயில் வரும் பிர யாணிகள் தங்குவதற்கு வசதி யான இடம் "கைலாஸ் லாட்ஜ்" பஸ் நிலையம் சமீபம், மீனாட்சி புரம், நாகர் கோயில்-1

Kailas Lodge
Meenakshipuram
Nagercoil – 1
Phone. 239

கல்லூரி, பள்ளி புத்தகங்கள்

உயர்நிலைப்பள்ளி, கல்லூரி நூலகங்களுக்குத் தேவையான ஆங்கிலம், தமிழ்ப் புத்தகங் களுக்கு விண்ணப்பிக்கவும்.

Xcel - Choix
Book Sellers & Publishers
114, Poonamallee High Road
Madras - 29.

ஞானரதம்

(புதுமை இலக்கிய மாத இதழ்)

ஆசிரியர் :

ஜெயகாந்தன்

1970 ஜனவரி - பொங்கல் முதல்

ஆண்டுச்சந்தா ரூபாய் 5/-

ஆயுள் சந்தா ரூபாய் 50/-

தனிப்பிரதி 50 பைசா.

விவரங்களுக்கு :

தேவ. சித்திரபாரதி

நிர்வாக ஆசிரியர்

சக்தி இல்லம், சென்னை - 36.

புதிய புத்தகங்கள்

686 பூனைக்கண் O3, 3N ,P —K9

ஆசிரியர் ; ஸ்ரீமதி திரிவேணி — தமிழாக்கம் : எஸ். கே. சீதாதேவி. வெளியீடு : வாசகர் வட்டம், 14, தணிகாசலம் செட்டிரோடு, தி. நகர், சென்னை—17. அக்டோபர் 1969 பக்கம் : 384. விலை : ரூ 8·00· வகை : நாவல் (கன்னட நாவல் — தமிழாக்கம்).

687 வால்மீகியின் விசித்ரம் O15, 1Al : g —K9

ஆசிரியர் : ஸ்ரீ. ராஜகோபாலன். வெளியீடு ''பாரத் வாஜம்'' E 1, பெஸன்ட் நகர், சென்னை-20. ஜூன், 1969. பக்கம் : 218. விலை : ரூ 3·75· வகை : வால்மீகி ராமாயணம் — திறனாய்வு.

688 மஞ்சளின் மருத்துவ மகிமை L —K9

ஆசிரியர் : 'வைத்திய ரத்ந' எஸ். சிதம்பர தாணுப்பிள்ளை வெளியீடு : சித்த மகுட பிரசுரம், 33/6, கஜபதி நாயுடு தெரு, சென்னை-30. நவம்பர், 1969. பக்கம் : 28. விலை : ரூ. 1-00. வகை : மருத்துவம்.

689 மரண கண்டி (சுரநூல்) L —K9

ஆசிரியர் : எஸ். சிதம்பரதாணுப்பிள்ளை. வெளியீடு : சித்த மகுட பிரசுரம், சென்னை-30. நவம்பர், 1969. பக்கம் : 32. விலை : ரூ 1·00 வகை : மருத்துவம்.

690 ஐம் பொறி விளக்கம் L —K9

ஆசிரியர் : எஸ். சிதம்பர தாணுப்பிள்ளை. வெளியீடு : சித்த மகுட பிரசுரம், சென்னை-30, 1969. பக்கம் : 28. விலை : ரூ 1·00. வகை : மருத்துவம்.

691 வாழ்க நீ எம்மான் ZG —w1 K9
(பன்மொழிக் கவிதைகள்)

ஆசிரியர் : கவிஞர் வா. மு. சேதுராமன். வெளியீடு : கவியரசன் பதிப்பகம், 74. வேங்கடேச கிராமணித் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2. அக்டோபர், 1969. பக்கம்: 128. விலை : ரூ 3.00. வகை : காந்தீயம் — பல மொழிக் கவிதைகளின் தொகுப்பு.

692 தனித் தமிழும் நாப்பழக்கம் P31. J —K9
(வழக்காற்றுத் தமிழாக்கம்)

வெளியீடு : இயற்றமிழ்ப் பயிற்றகம் 13/1, நடவாகனத் தெரு, திருவாரூர். 1969. பக்கம் : 48. விலை : ரூ 0·20. வகை : தமிழ் மொழி.

693 இயற்கையின் இயக்க இயல் A —K9

ஆசிரியர் : பிரெடெரிக் எங்கெல்ஸ். தமிழில் : ஆர். கே. பாண்டுரங்கன். வெளியீடு : முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ. விற்பனை உரிமை : நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை-2. 1969. பக்கம் : 608. விலை : ரூ 2·00 வகை: விஞ்ஞானம்.

694 உண்மை மனிதன் கதை O ,3 ,U —K9

ஆசிரியர் : பொலெவோய். தமிழில் : பூ. சோமசுந்தரம். வெளியீடு : முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ. வி. உ. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை—2. 1969. பக்கம் : 348. விலை : ரூ 2·20. வகை : நவீனம்.

695 ஏழை பங்காளன் லெனின் —K9

ஆசிரியர் : அ. லெ. நடராசன்
வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 6, நல்ல தம்பி செட்டி தெரு, சென்னை-2. ஆகஸ்டு, 1969, பக்கம் : 404. விலை : ரூ 5·00. வகை : லெனின் வாழ்க்கை வரலாறு-

696 தமிழின் சிறப்பு O31 : g —K9

ஆசிரியர் : கி. ஆ. பெ. விசுவநாதம். வி. உ : பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை - 1. மார்ச் 1969. பக்கம் : 142. விலை : ரூ 2·50. வகை : தமிழ் இலக்கிய ஆராய்ச்சி.

697 திருவள்ளுவர் நாடகம் O31, 1C5 w2 K9

ஆசிரியர்: ஆறு. அழகப்பன். வி. உ: பாரிநிலையம், சென்னை-1. ஜனவரி 1969. பக்கம் : 58. விலை : ரூ 1·50. வகை: திருக்குறள் — நாடகம்.

698 காந்தி தரிசனம் ZG —K9

ஆசிரியர் : கோவை அய்யா முத்து
வி. உ : பாரிநிலையம், சென்னை-1. அக்டோபர் 1969. பக்கம் : 202. விலை : ரூ 3.50. வகை: காந்தீயம்.

699 பருவ மயக்கம் y —K9

ஆசிரியர் : ஐந்திரன். வெளியீடு : ஐந்திரன். P B NO. 37, திருவண்ணாமலை. வ. ஆ. 1969. பக்கம் : 62. விலை: ரூ 0·75. வகை : சமூகம் — கட்டுரை.

700 மயக்க வரி (Tax of Intoxication) y —K9

ஆசிரியர் : கு. கணேசன். வெளியீடு : குமரன் பதிப்பகம், 6, மேட்டுத் தெரு, குமுதி, இராமநாதபுரம் மாவட்டம். நவம்பர் 1969. பக்கம் : 44. விலை, ரூ 0·50 வகை : சமூகம் — குடிப்பழக்கம்.

701 அரசியாரும் அம்மையாரும் Q23 —K9

ஆசிரியர் : சு. லலிதாம்பாள். வெளியீடு. வானதிப் பதிப்பகம், தி. நகர், சென்னை—17. செப்டம்பர் 1969, பக்கம் : 80 விலை : ரூ 1-50 வகை : சைவசமயம்.

702 நள தமயந்தி O31, 1 K9

ஆசிரியர் : சு. லலிதாம்பாள்.
வெளியீடு : வானதிப் பதிப்பகம், தி. நகர், சென்னை—17. ஆகஸ்டு 1969. பக்கம் ; 68. விலை : ரூ 1·25 வகை: நள வெண்பா பற்றி (தமிழ் இலக்கியம்).

703 ஈசாப் நீதிக் கதைகள் பாகம் 1 O31, 3x K9

ஆசிரியர் : மு. சு. அருள்சாமி. வெளியீடு: வானதிப் பதிப்பகம், தி நகர், சென்னை—17. பதி 3. நவம்பர் 1969. பக்கம்: 100. விலை : ரூ 1.50, வகை : நீதிக் கதைகள்.

704 ஈசாப் நீதிக் கதைகள் பாகம்2.
O31, 3x K9

ஆசிரியர் : மு. சு. அருள்சாமி
வெளியீடு: வானதிப் பதிப்பகம். தி நகர், சென்னை—17. பதி 2. 1969. பக்கம் : 88. விலை : 1·50. வகை: நீதிக் கதைகள்.

705 ஈசாப் நீதிக் கதைகள் பாகம்3. O31, 3x K9

ஆசிரியர் : மு. சு. அருள்சாமி. வெளியீடு : வானதிப்பதிப்பகம். தி. நகர். சென்னை-17, பதி 3. நவம்பர் 1969. பக்கம் : 84. விலை : ரூ 1'50. வகை : நீதிக் கதைகள்,

---

Edited by : KUYILAN (G. Ramalingam)
and Printed by Kondah. Kasi. Seetharamon at Sree Agastya Printers
85, III Main Road, C.I. T.Nagar (Ext.) Madras-35
For the Publishers " Bibliopole "
14, Thanikachalam chetty Road: Madras-17.